Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :186 வைகாசி 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 02 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051






## விரைவில் தேர்தல் நடத்துவதே இலக்கு

### மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 2

தேர்தலைப் பிற்போடும் தேவை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடையாது. ஜனநாயக நாடொன்றில் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன் 02

## அடுத்த அபாயம் டெங்கு!


கொழும்பு, ஜூன் 2

மழையுடனான காலநிலை குறைவடைந்து வரும் நிலையில் டெங்குத் தொற்று வலுவாகும் அபாயம் உள்ளது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு ஆளுநர்கள், உள்ளூராட்சித் தலைவர்கள், சுகாதார அதிகாரிகள் உடன் தயாராக வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிர 02

## 11 கொரோனா காவு

கொழும்பு, ஜூன் 2

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஆண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். இதையடுத்து கொரோனாவால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது. 02



## தமிழன் என்பதால் என் மீது தாக்குதல்

### அமெ. குடியுரிமைதான் எனக்குப் பாதுகாப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

தமிழன் என்பதாலேயே என் மீது விமர்சனங்கள் மற்றும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. தேர்தல்கள் ஆணைக்குழு போன்ற மிக உயர்ந்த இடங்களுக்கு தமிழர்கள் வரக்கூடாது என்று எண்ணுகின்றார்கள். அதன் காரணமாகவே என்னை இலக்கு வைத்து தொடர்ச்சியாக தாக்குதல் நடத்துகின்றார்கள் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார். 02

## முகமாலையில் இன்று அகழ்வு

கிளிநொச்சி, ஜூன் 2

முகமாலையில் கடந்த வாரம் மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் இன்று இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. 02

## கொரோனா: நேற்று 10 மொத்தம் 1,643

கொழும்பு, ஜூன் 2

கொரோனாத் தொற்றுக்குள்ளான 10 பேர் நேற்று இனங்காணப்பட்டனர். அதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 643 ஆக உயர்வடைந்தது. 02

## வற்றாப்பளை அம்மனுக்கு தீர்த்தம்



முல்லைத்தீவு, ஜூன் 2

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் உற்சவத்துக்கான தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு 02

## தேர்தலுக்கு எதிரான மனுக்களை ஏற்பதா? மன்று இன்று தீர்மானம்

கொழும்பு, ஜூன் 2

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானி அறிவிப்பு, தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தல் 02

## முல்லை முகாமிலிருந்த ஒருவருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் 02

## கொரோனா பிடியில் 754 படையினர்!

கொழும்பு, ஜூன் 2

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கடற்படையினரின் எண்ணிக்கை 754 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 411 பேர் முழுமையாக குணமடைந்துள்ளனர். 348 கடற்படை வீரர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு இராணுவ ஊடகப் 02

முச்சந்தி முரளி




## சுகாதார துறையினருக்கும் இனிமேல் அஞ்சல் வாக்கு!

கொழும்பு, ஜூன் 2

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறை அலுவலர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளது. 02

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

011 200 88 88

செலான் வங்கி

## அடுத்த...

தமர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் பணிப்புரை விடுத்துள்ளனர்.

டெங்கு ஒழிப்புச் செயலணியுடன் நேற்றுத் திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலியே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் அதிக டெங்குத் தொற்றாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகின்றனர். இந்த மாகாணத்துக்குப் பிற பிரதேசங்களில் இருந்து அதிகளவானோர் வருகின்றனர். மேல் மாகாணத்துக்கு முன்னுரிமையளித்து டெங்கைக் கட்டுப்படுத்தினால், அவர்கள் நோய்க்காவிகளாக மாறுவதைத் தடுக்க முடியும் என்று ஜனாதிபதி அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு முற்பகுதியில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை, மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடு, மக்கள் வீட்டுத் தோட்டங்களைச் சுத்தமாக வைத்திருந்தமை என்பவை இதற்குக் காரணம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

டெங்கு பரவும் வகையில் செயற்படுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் இணைந்து இவ்வாறான இடங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு சுற்றாடல் பொலிஸ் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

டெங்குத் தொற்றாளர் ஒருவர் அரச அல்லது தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டால் உடனடியாக அது பற்றிப் பிரதேச வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும், தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட இடங்களுக்கு உடனடியாக புகை விசுறுதல் போன்ற தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் பணிக்கப்பட்டது என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## விரைவில்...

றம் அத்தியாவசியமானது. சுகாதாரப் பாதுகாப்பு ஆலோசனை வழிகாட்டல்களுக்கு அமையக் கூடிய விரைவில் தேர்தலை நடத்தவே ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய.

நேற்று அவர் விடுத்துள்ள சிறப்பு அறிவித்தல் ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாகப் பெரும்பாலானவர்கள் முக்கியமாக அரசியல்வாதிகள், சிவில் சமூக அமைப்புக்கள், ஊடகங்கள், பொறுப்புள்ள குடிமக்கள் எனப் பலரும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கேள்வி எழுப்புகின்றனர்.

தற்போது ஆணைக்குழு சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஊடாக இந்த மாதம் 20ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாது என்று நீதிமன்றுக்கு அறிவித்துள்ளோம். தேர்தலை நடத்துவதற்குப் பொருத்தமான தினத்தைத் தீர்மானிப்பது தொடர்பாகச் சட்டரீதியான தடைகள் ஆணைக்குழுவுக்கு ஏற்படுத்தாவிட்டால் வேறு தினத்தைத் தீர்மானிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

சுகாதாரப் பாதுகாப்பு ஆலோசனைகளுக்கு அமைய, கூடிய விரைவில் தேர்தலை நடத்துவதே ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாகும். தேர்தலைப் பிற்போடுவதற்கான எந்த அவசியமும் ஆணைக் குழுவுக்குக் கிடையாது. என்றுள்ளது. (எ)

## முகமாலையில்...

கிளிநொச்சி, முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது கடந்த வாரம் அங்கு மனித என்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்ட பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கையிட்டனர். கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

கடந்த 26ஆம் திகதி அங்கு அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் மனித எலும்பு எச்சங்கள், துப்பாக்கிகள், ரவைகள், மகசீன்கள், விடுதலைப் புலிகளின் சீருடைகள், அவர்களின் அடையாள இலக்கத் தகடு என்பன மீட்கப்பட்டிருந்தன.

அந்தப் பகுதியில் இன்று இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (எ-6)

## தமிழன்...

'உதயன்' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு கோத்தாபய ராஜபக்ச காண்பித்த அமெரிக்கக் குடியுரிமை துறப்பு ஆவணங்களின் உண்மைத் தன்மை பரிசீலிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலகிய பின்னர் தனது பாதுகாப்புக் கேள்விகுறியாக உள்ளமையால், அமெரிக்கக் குடியுரிமையை தான் கைவிடப் போவதில்லை என்றும் அவர் நேர்காணலில் தெரிவித்தார்.

(விரிவான நேர்காணல்: பக்.08,09)

## வற்றாப்பளை...

நேற்று நடைபெற்றது.

முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் இருந்து நோன்பு குத்தி நிற்பவர்கள் தீர்த்தப் பானையுடன் மரபு வழியாக முல்லைத்தீவு சிலாவத்தை தீர்த்தக்கரை கடலில் தீர்த்தம் எடுத்தனர். கடற்கரையில் மடை பரவி பூசைகள் நடைபெற்று சென்ற வழியாகவே முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தை அடைந்தனர்.

முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் ஏழு நாள்கள் உப்புநீரில் விளக்கெரியும் அற்புதத்துடன், எதிர்வரும் திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளது. திங்கட்கிழமை அதிகாலை வரை காட்டாவிநாயர் ஆலயத்திலுள்ள அம்மன் சந்நிதானத்தில் உப்புநீரில் விளக்கேற்றி பூசை வழிபாடுகள் இடம்பெறும். திங்கட்கிழமை அதிகாலை மடைப்பண்டங்களுடன் தீர்த்தக்குடம், உள்ளிட்ட பொருட்கள் காட்டாவிநாயகர் ஆலயத்திலிருந்து, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு வருடாந்த பொங்கல் விழா இடம்பெறும்.

தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உள்ள நிலையில், அனுமதி வழங்கப்பட்டவர்கள் மட்டும் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர். தீர்த்தம் எடுக்கும் நிகழ்வில் படையினர், பொலிஸார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (எ-19,246,110)

## சுகாதார...

தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதால் தேர்தல் தினத்தன்று சுகாதாரத் துறையினரின் சேவை தேவைப்படலாம் என்பதாலேயே அவர்களுக்குத் தபால் மூலம் வாக்களிப்பதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதற்காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார சேவை அலுவலகங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் தங்கள் வைத்தியசாலைப் பணிப்பாளர் அல்லது பிராந்திய சுகாதார சேவைகய் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டுதபால்மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## முல்லை...

நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் முகாமில் இருந்த ஒருவருக்குக் கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் நேற்று 43 பேருக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட 6 பேருக்கும், வவுனியா பொது வைத்தியசாலையில் பரிசோதிக்கப்பட்ட 3 பேருக்கும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பரிசோதிக்கப்பட்ட 2 பேருக்கும், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் பரிசோதிக்கப்பட்ட ஒருவருக்கும், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 14 பேருக்கும், வவுனியா தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 6 பேருக்குமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதில் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் முகாமில் இருந்தவருக்குக் கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (எ)

## கொரோனா காவு...

அண்மையில் குவைத்திலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தவேளை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 45 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நோய்த் தொற்று தீவிரமடைந்ததைத் தொடர்ந்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட நிலையில் இன்று காலை உயிரிழந்துள்ளார் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார்.

இலங்கையில் கொரோனாத் தொற்றால் 8 ஆண்களும், 3 பெண்களும் இதுவரை உயிரிழந்துள்ளனர். (எ-22)

## கொரோனா நேற்று...

அதேவேளை, கொரோனா தொற்றாளர்கள் 811 பேர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். 821பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் 65 பேர் மருத்துவமனைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## மனுக்களை...

வர்த்தமானி அறிவிப்பு ஆகிவற்றை வலுவிழக்கச் செய்யக்கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 8 அடிப்படை உரிமை மனுக்கள் மற்றும் 13 இடையீட்டு மனுக்கள் மீதான கட்டளை இன்று வழங்கப்படவுள்ளது.

மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா? அவை தொடர்பில் இடைக்கால உத்தரவு ஏதும் விடுப்பதா? அல்லது மனுக்களைத் தள்ளுபடி செய்வதா? என்பவை தொடர்பில் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட குழாம் தனது முடிவை இன்று வெளியிடவுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் நீதியரசர்களான, விஜித் மலல்கொட, புவனேக அளுவிஹார, சிசிர டி ஆப்றூ மற்றும் பிரியந்த ஜயவர்தன ஆகியோர் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்பே இந்த மனுக்கள் விசாரிக்கப்பட்டன. மனுதாரர்கள், எதிர் மனுதாரர்கள், இடைபுகு மனுதாரர்கள் ஆகியோரின் சமர்ப்பணங்கள் நேற்றுடன் நிறைவடைந்தன.

நேற்று மாலை 5 மணி வரை நடைபெற்ற நீண்ட விசாரணையின் இறுதியில் தனது தீர்மானத்தை இன்று பிற்பகல் 3 மணிக்கு அறிவிப்பதாக உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் தெரிவித்தது.

நேற்றுக் காலையும் மாலையும் சுமார் 4 மணி நேரத்துக்கு மேல் மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணியால் பதிலுரை வழங்கப்பட்டது.

அதன்பின்னர் மேற்குறித்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா? இல்லையா? என்பது தொடர்பான கட்டளையை இன்று அறிவிப்பதாக நீதியரசர்கள் தெரிவித்தனர்.

வழமைக்கு மாறாக இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் 10 நாள்களாகக் காலையும் மாலையுமாக நீண்ட மிக நுணுக்கமான விசாரணையை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் மேற்கொண்டிருந்தது. (எ-22)

## கொரோனா...

பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இராணுவத்தினரால் செயற்படுத்தப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து 58 பேர் பி.சி.ஆர். பரிசோதனை களுக்கு உட்படுத்தப்பட்டு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது வரையில் (நேற்றுத் திங்கட்கிழமை வரை) முப்படையினரால் செயற்படுத்தப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து 11 ஆயிரத்து 488 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர். அதேவேளை முப்படையின் கண்காணிப்பின் கீழ் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 44 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 5 ஆயிரத்து 108 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனா தொற்றுக்குள்ளான 4 கடற்படை வீரர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கடற்படை வீரர்கள் எண்ணிக்கை 754 ஆகும். இவர்களில் 403 கடற்படை வீரர்கள் முழுமையாக குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வீடு திரும்பியுள்ளனர். 348 வீரர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்- என்றார். (எ)

## கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கிளிநொச்சியில் நேற்று திறப்பு

கிளிநொச்சி, ஜூன் 2
கிளிநொச்சியில் 84.4 மில்லியன் ரூபா செலவில் திண்மக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. உலகவங்கியின் நிதி உதவியுடன் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரமேம்பாட்டுதிட்டத்தின் கீழ் குறித்த சுத்திகரிப்பு நிலையம் நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல், வீடமைப்பு வசதிகள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டு நேற்று கரைச்சி பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது.
கிளிநொச்சி கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேசங்களில் அகற்றப்படும் திண்மநீர்க்கழிவு குறித்த நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு அவை மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணியளவில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.
நிகழ்வில் நீர்வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் யு. கெ .ரணதுங்க மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். அதன்போது மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ப-6)





# உறவுகளின் போராட்டம் 1200 நாள்கள்

**வவுனியா,ஜூன் 2**
**வவுனியாவில் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் நேற்றுத் திங்கட்கிழமையுடன் ஆயிரத்து 200 நாள்களை எட்டியது.**

இதனை முன்னிட்டு போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக நேற்று மதியம் 12.15 மணியளவில் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.
"எங்கே எங்கே பிள்ளைகள் எங்கே, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், ஓமந்தையில் கையளிக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே?" போன்ற பல்வேறான கோசங்களை எழுப்பியவாறு தனிநபர் இடைவெளியைப் பேணி போராட்டத்தில் ஈடுபட்டனர்.
போராட்டக்காரர்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன் கொடிகளையும் ஏந்தியவாறு, "சிங்கள மக்களுடன் வாழ பாக்கியம் பெற்றவர்கள் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்க அருகதையற்றவர்கள்" என்ற வாசகம் தாங்கிய பதாகையுடன் போராட்டத்தை முன்னெடுத்தனர். (க-110)

## தாக்குதல்களில் மூவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 2
தென்மராட்சிப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் மூவர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளன.
கைதடி நாவற்குழியைச் சேர்ந்த 43 வயது நபர், கெற்பேலியைச் சேர்ந்த 32 வயது நபர் மற்றும் கிளாலியைச் சேர்ந்த 26 வயது நபர் ஆகியோரே சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஜ-9)

## காத்தான் குளத்தில் ஆயுர்வேத நிலையம்

மன்னார்,ஜூன் 2
மாந்தை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காத்தான் குளம் கிராமத்தில் தனியார் பாரம்பரிய ஆயுர்வேத வைத்திய நிலையம் நேற்றுத் திங்கட்கிழமை திறக்கப்பட்டது.
வைத்திய நிலையத்தை மன்னார் மாவட்ட குருக்களின் முதல்வர்விக்டர்சோசை அடிகளார் திறந்தார்.
நிகழ்வில் மாந்தை பிரதேச சபை செயலாளர் மற்றும் பங்குத்தந்தையர் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர். (க-213)

## மின்சார பாவனையாளர்களின் நலன்கருதி ஒன்லைன் வசதிகள்

கொழும்பு, ஜூன் 2
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார பாவனையாளர்களின் நலன் கருதி முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளவும், சேவையைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் ஒன்லைன் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.
இதன்மூலம் மின்சார பாவனையாளர்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு நேரடியாக வருகைதரவேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறு ஆணைக்குழுவை இலகுவாக தொடர்புகொள்ளலாம் என்பது தொடர்பான ஊடக அறிக்கை ஒன்று ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பாவனையாளர்கள் மற்றும் பிற சேவை பயனாளர்களை ஒன்லைன் (இணைய சேவை) மூலமாக இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறது. ஆணைக்குழுவின் அலுவலகத்திற்குச் செல்லாமல் தங்கள் முறைப்பாடுகளைத் தீர்க்க மின்சாரப் பாவனையாளர்களுக்கு ஒன்லைன் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மின்சார பாவனையாளர்களின் தீர்க்கப்படாத முறைப்பாடுகளை பின்வரும் வழிகளில் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்கலாம்.
வார நாள்களில் காலை 8.30 மணி முதல் மாலை4.30மணிவரை0112392607அல்லது 0112392608 என்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்கலாம். 0770126253 வாட்ஸ்அப் (whatsapp), வைபர்(VIber) மற்றும் இமோ (IMO) மூலம், Www.pucsl.gov.lk <http:// Www. Www.pucsl.gov.lk> என்ற இணையதளத்தின் மூலம், consumers@pucsl.gov.lk <mailto:consumers@pucsl.gov.lk> மின்னஞ்சல் மூலம், www.facebook.com/pucsl எனும் முகநூல் (Facebook) மூலமாக மின்சார கைத்தொழில் மற்றும் மசகு எண்ணெய் சந்தை ஒழுங்குறுத்துகையுடன் தொடர்புடைய பங்குதாரர்கள்தங்கள் சேவைகளுக்கு, 077 0126250 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதேனும் ஓர் அதிகாரியைச் சந்திப்பதற்கான அவசியம் காணப்படும் பட்சத்தில் அதற்கான தினத்தையும் நேரத்தையும் ஒதுக்கிக் கொள்வதற்கும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 0112392607 மற்றும் 0112392608 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும். இன்றேல் info@pucsl.gov.lk அல்லது www.facebook.com/pucsl என்ற முகநூல் பக்கத்தினூடாக தொடர்புகொண்டு நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம். உங்களது வேண்டுகோளுக்கு இணங்க பணியாற்றும் பிரிவினர் உங்களைச் சந்திப்பிப்பதற்கான நேரம் குறித்து விரைவில் அறியத்தருவர். இன்றேல் இணைய சேவை ஊடாக தொடர்பு கொண்டு உங்களது பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு பெருநிறுவன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயனாத் ஹேரத் 0772943193 அவர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. (ப)



## விவசாயிகளுக்கு தரமான நிலக்கடலை விதைகள்

முல்லைத்தீவு,ஜூன் 2
முல்லைத்தீவு மாவட்டத்தில் காலநிலைக்கு சீரமைவான விவசாய திட்டம் ஊடாக விவசாயிகளுக்கு தரமான நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் காலநிலைக்கு சீரமைவான விவசாயத் திட்டம் ஊடாக வழங்கப்பட்ட விதை நிலக்கடலைகள் தரம் இன்மை தொடர்பில் விவசாயிகள் ஊடகங்கள் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளனர்.
இது பற்றி பிரதி மாகாண விவசாய பணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டதைத் தொடர்ந்து தரம் இல்லாத நிலக்கடலையைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளில் நிலக்கடலையை பயிரிட்ட விவசாயிகளை தவிர்ந்த ஏனைய விவசாயிகளுக்குதரமான நிலக்கடலை வழங்கப்பட்டது.
ஐயன்கன்குளம்,கோட்டைகட்டிய குளம் ஆகியவற்றைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட விவசாயிகள் ஆகியோருக்கும் வழங்கப்பட்டதாக விவசாயத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஜ-19)

## மயங்கி வீழ்ந்த புற்றுநோயாளி சாவு

மயங்கி வீழ்ந்த புற்றுநோயாளி சம்பவ இடத்தில் சாவடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கைதடி நுணாவிலில் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த நமசிவாயம் மதிவதனன் வயது 54 என்பவர் புற்றுநோயினால் அவதிப்பட்டுவந்துள்ளார். இவரது மனைவி பிள்ளைகள் புலம்பெயர் நாட்டில் உள்ள மையால் உறவினரின் பராமரிப்பில் தங்கி வாழ்ந்துள்ளார். நேற்றுமுன்தினம் மயங்கி வீழ்ந்து சாவடைந்தமையால் உறவினர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுத் திங்கட்கிழமை அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.
அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (க-9)

# வழமைக்கு திரும்பியது திருநெல்வேலிச் சந்தை

**யாழ்ப்பாணம், ஜூன் 2**

**ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 70 நாள்களின் பின்னர், யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச்சந்தை நேற்று வழமைக்குத் திரும்பியது.**



கொரோனா வைரஸ் தாக்கத்தை நாட்டில் கட்டுப்படுத்தும் முகமாக நாடுமுழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இதனால் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொதுச்சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. கடந்த சில வாரங்களில் யாழ்ப்பாண மாவட்டம் படிப்படியாக வழமைக்குத் திரும்பியது. பொதுச் சந்தைகளும் திறக்கப்படவேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமையவும் மாவட்டச் செயலரின் அறிவுறுத்தலுக்கமைவாகவும் யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள பொதுச்சந்தைகள் அனைத்தையும் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. அதன்படி 70 நாள்களின் பின்னர் நேற்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச் சந்தை மீள வழமைக்குத் திரும்பியது.
அதிகாலை 5 மணி முதல் சந்தை திறக்கப்பட்டு சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் சந்தை நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். நல்லூர் பிரதேச சபையினரால் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றக் கூடிய வாறான ஏற்பாடுகள் ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட நிலையில் நேற்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச்சந்தை வழமைக்குத் திரும்பியது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதைக் கண்காணிக்கும் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டனர். திருநெல்வேலிச் சந்தை அமைந்துள்ள ஆடியபாதம் வீதியானது காலை 6 மணி தொடக்கம் 12 மணி வரை ஒரு வழிப்பாதையாக பயன்படுத்தப்பட்டது. (ஐ-111)



## ஹெரோய்னுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 2
ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பால்பண்ணை பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் அதே இடத்தைச் சேர்ந்த 18 மற்றும் 19 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
சந்தேக நபர்களிடமிருந்து 80 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-20)

## ஊர்காவற்றுறை நூலகர் ஓய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 2
ஊர்காவற்றுறை பொதுநூலகத்தில் நூலகராகக் கடமையாற்றிய குமாரசாமி வைகுந்தவாசன் தனது 30 வருட சேவையைப் பூர்த்தி செய்து கடந்த 20 ஆம் திகதி சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.
இவர் சாவகச்சேரி பொது நூலகத்தில் சேவையை ஆரம்பித்து வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் பொது நூலகத்திலும் பின்னர் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு மற்றும் ஊர்காவற்றுறை பொதுநூலகங்களிலும் சேவையாற்றியுள்ளார். (க-9)

## குழிக்குள் தவறி வீழ்ந்த சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 2
வீட்டின் கழிப்பறை குழியினுள் தவறி வீழ்ந்து 14 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தெல்கொட உடுபில, இசிகிலிகந்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.
வீட்டின் கழிப்பறை குழியின் மீது போடப்பட்டிருந்த கொங்கிறீட் தட்டில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், குறித்த கொங்கிறீட் தட்டின் மீது நின்றிருந்த சிறுமி தட்டு உடைபட்டு குழியினுள் வீழ்ந்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
இதனையடுத்து, அவர் கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## சங்கரத்தையில் வீடு கையளிப்பு

யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்று நேற்று பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.
மீள்குடியேற்றம் மற்றும் பொருளாதார அலுவல்கள், புனர்வாழ்வு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், சுமார் 9 லட்சத்து 95 ஆயிரம் ரூபா நிதியில், இராணுவத்தினரின் சமூக சேவைகளில் ஒன்றாகிய வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், போரால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பத்துக்கு இந்த வீடு புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.
சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/159 சங்கரத்தை துணைவி கிராம அலுவலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், மற்றும் யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத்தளபதி ருவான் வணிகசூரிய கையளித்தனர்.
513 பிரிகேட், 51 படைப்பிரிவில், பிரிகேடியர், லலித் ரத்நாயக்கவின் பணிப்பின் கீழ் இராணுவத்தினரின் பங்களிப்பில் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த வீடு அமைப்பதற்கு பல நன்கொடையாளர்களும் தமது உதவிகளை வழங்கியிருந்தனர்.
இந்த நிகழ்வில், மேலதிக செயலர் ம.பிரதீபன், மாவட்ட உதவிச் செயலர் (காணி) எஸ்.முரளிதரன், இராணுவ உயர் அதிகாரிகள், சங்கானை பிரதேச செயலாளர் உட்பட வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி, கிராம அலுவலர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-106)

# கொடுப்பனவை பெறத் தவறியோர் அதனைப் பெற்றுக்கொள்ளலாம்

### மன்னார் சமுர்த்தி அதிகாரி தெரிவிப்பு

மன்னார், ஜூன் 2
கொரோனா ஒழிப்பு நடவடிக்கையின் பொருட்டு தொழில் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு வழங்கப்படும், சமூக நலக் கொடுப்பனவுகளை எவராவது பெறுவதில் தவறியிருந்தால் அவர்கள் தங்கள் பிரதேச செயலாளருக்கு விண்ணப்பம் செய்து அக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என மன்னார் மாவட்ட சமுர்த்தி அதிகாரி ஐ. அலியார் தெரிவித்தார்.
மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் கொரோனா ஒழிப்பு நடவடிக்கையின் பொருட்டு தொழில் பாதிப்புக்கான சமூக நலக் கொடுப்பனவாக முதலாம் கட்டமாக ஏப்ரல் மாதம் 32ஆயிரத்து 392 குடும்பங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.
இதே குடும்பங்களுக்கு தற்பொழுது இரண்டாம் கட்டமாக மே மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த சனிக்கிழமை வரை 28ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு 140.5 மில்லியன் ரூபா கொடுப்பனவு இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.
இன்னும் 4ஆயிரத்து 292 குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட இருக்கின்றது. இவைகள் புதன்கிழமைக்குள் வழங்கப்பட்டுவிடும் இதற்கான நிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை தங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. அத்துடன் முதலாம் கட்ட நிதி வழங்கப்பட்ட வேளையில் யாராவது ஊரடங்குச் சட்டம் காரணமாக இக் கொடுப்பனவை பெறமுடியாது விடுபட்டிருந்தால் இவர்களும் தங்கள் கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலாளரிடம் விண்ணப்பம் செய்து இக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். (ப-60)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# முன் தோன்றிய மூத்த குடியும் திரிக்கப்படும் வரலாறும்

யாழ்ப்பாணப் பொது நூலகம் சிங்கள இனவாதிகளால் எரிக்கப்பட்டு நேற்றோடு (ஜூன் 01) 39 வருடங்கள் . தமிழர்களின் அறிவுக்கருவூலமான நூலகத்தையும், அதனுள் பாதுகாக்கப்பட்ட 97000 கிடைத்தற்கரிய புத்தகங்களையும் ஜூன் முதலாம் திகதி நள்ளிரவு தின்னத் தொடங்கிய தீயின் பசி, அடுத்த நாள் விடியும் வரை தொடர்ந்தது. கடைசியில் உருக்குலைந்த கட்டடமும், புத்தகங்களின் சாம்பல் மேடுமே எஞ்சின. இலங்கையின் இன ஒடுக்குமுறையின் மிகமுக்கியமான இந்த நிகழ்வும், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு மிக முக்கியமான ஒரு தூண்டல். இப்படிப்பட்ட , தமிழர்களின் வாழ்வியலில் திருப்புமுனையாகவும், கறுப்பு நாளாகவும் அமைந்த நாளினைக் கூட சரிவர அறியாமல், மே மாதம் 31 ஆம் திகதிதான் நூலகம் எரிக்கப்பட்டதாக இன்னமும் பெரும்பான்மையான தமிழர்கள் நம்பிக்கொண்டிருப்பதை என்னவென்று சொல்வது ?

மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான , தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் யாழ். வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியில் நடந்து கொண்டிருந்தது. அப்போது அங்கிருந்த பொலிஸ் மீது போராளிக் குழு ஒன்று துப்பாக்கிச் சூடு நடத்த அந்த இடம் கலவரபூமியானது. இராணுவத்தினரும், பொலிஸாரும் மேலதிகமாக இறக்கப்பட்டு , யாழ்ப்பாணம் எங்கும் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டு இனவெறித் தாக்குதல் தொடங்கியது. பல தமிழர்கள் படையினரின் மோசமான தாக்குதலுக்கு உள்ளானார்கள். ஏராளமான வர்த்தக நிலையங்கள் யாழ்.நகரில் எரியூட்டப்பட்டன. இரவோடிரவாக இவ்வளவும் நடைபெற்று முடிந்து ஜூன் முதலாம் திகதி பகல் இந்த இனவெறியாட்டம் கொஞ்சம் தணிந்தது. ஆனால் இரவானதும் இனவாதப் பேய்கள் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி ஆடத்தொடங்கின. யாழ்ப்பாணத்தில் இருந்த ஈழநாடு பத்திரிகைக் காரியாலயமும், அதனை அண்டியிருந்த கடைகள் பலவும் தீக்கிரையாயின. அப்படியும்வெறிஅடங்காதவர்களாகஏற்கனவேதிட்டமிட்டபடி தமிழர்களின்அறிவுப் புலத்தின் பின்னணியாக பேரினவாதிகளின் கண்ணை உறுத்திக் கொண்டிருந்த யாழ்.பொது நூலகத்துக்கு இனவாத வானரங்கள் தீமூட்டிப் போயின.

அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்த பத்திரிகைக் காரியாலயமும் தீமூட்டப்பட்டதால், குறித்த நிகழ்வு பின்னரே ஊடகங்களில் வெளியானது. இருப்பினும் 'யாழ்ப்பாணம் மீண்டும் எரிகிறது' என்பன போன்ற நூல்களும் , சோமீதரன் இயக்கிய "எரியும் நினைவுகள்" என்ற ஆவணப்படமும் இந்த அறிவுப்படுகொலையை தெளிவாகப் பதிவு செய்துள்ளன. ஆயினும் இன்றளவும் மே 31 ஆம் திகதியே நூலகம் எரிக்கப்பட்டதாகப் பலரும் பதிவிடுவதும், கட்டுரை எழுதுவதுமாக வரலாற்றின் பக்கங்களைத் தவறாக வியாக்கியானம் செய்ய முற்படுகின்றனர். எம்மினத்தின் அறிவுக்கு தீ வைக்கப்பட்ட மிகமுக்கியமான நாள் எப்போது என்பதைப் பதிவு செய்வதில் கூட, நாங்கள் சரிவர அக்கறை கொள்ளாமையே இப்படித் தவறான நாளொன்றை, நூலக எரிப்பு நாளாக நாம் நினைவில் வைத்திருப்பதற்குக் காரணம்.

இதுவே சிங்களவர்களாக இருந்திருந்தால், எரிக்கப்பட்ட நூலகத்தின் கட்டடங்களை அப்படியே பேணி, அதனருகே எப்போது, எப்படி, யாரால் எரிக்கப்பட்டது என பிரமாண்டமான கல்வெட்டு ஒன்றை நாட்டி, நூலகம் எரிக்கப்பட்ட வரலாற்றை புகைப்படங்களோடு சிறு நூலாக்கி, அதனை நூலகத்தைப் பார்வையிட வரும் சகலருக்கும் தினமும் விநியோகித்து, சிறுபிள்ளைகூட நூலக எரிப்பைப் பற்றி சரியான தகவல்களைச் சொல்லுமளவுக்கு செய்திருப்பார்கள். ஆனால் நாங்களோ நூலகம் எரிக்கப்பட்டு வெறும் 39 ஆண்டுகளுக்குள், எப்போது எரிக்கப்பட்டது என்பது குறித்து நமக்குள் நாமே முரண்பட்டு நிற்கிறோம். சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன்னரான நிகழ்வைப் பற்றியே சரியான வரலாற்று ஆதாரங்கள் இருந்தும் அதனைப் பேண முடியாத நாம் தான், "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்த குடி" என்று சுயதம்பட்டம் அடிக்கிறோம். முதலில் எங்கள் கடந்தகால வரலாற்றை நாம் சரியாக ஆவணப்படுத்த முயல்வோம். அதன் பின்னர் புதிய வரலாறு படைப்பது பற்றி யோசிக்கலாம்.

# ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த சகல கறவைப் பசுக்களும் சாவு

## அடுத்த இறக்குமதியை நிறுத்துமாறு அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 2

**ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து கறவைப் பசுக்களும் அவற்றின் சந்ததியும் இறந்துவிட்டன. எனவே, கறவைப் பசுக்களை இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவை திட்டத்தை இடைநிறுத்துமாறு அகில இலங்கை கமநல சம்மேளனம் அரசிடம் வலியுறுத்தியுள்ளது.**

உள்ளூர் கால்நடை வளர்ப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆஸ்திரேலியாவிலிருந்து 2ஆயிரத்து 500 கறவைப் பசுக்களை இறக்குமதி செய்வதற்கு கடந்தவாரம் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

தற்போது நாட்டில் நாளாந்தம் 1.2 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. நாளாந்தம் 3.5 மில்லியன் லீற்றர் பால் தேவைப்படுகின்றது என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண கூறியிருந்தார்.

இந்தநிலையில், ஆஸ்திரேலியாவிலிருந்து நோயுற்ற பசு மாடுகளை இறக்குமதி செய்கின்றமை தொடர்பாக அரசின் ஒரு பகுதியினரின் அக்கறையின்மை காரணமாக பால் விவசாயத் துறை கடுமையான நெருக்கடியில் சிக்கியுள்ளது என்று அகில இலங்கை கமநல சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசு உண்மையில் மாடுகளை இறக்குமதி செய்ய விரும்பினால், இந்தியா அல்லது பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யலாம். ஆஸ்திரேலியாவிலிருந்துவரும் கறவைப் பசுக்களுக்கு இலங்கையின் காலநிலை பொருந்தாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு 73 மில்லியன் ரூபா செலவாகின்றது என்று குறிப்பிட்ட நாமல் கருணாரத்ன, எனவே இந்தத்திட்டத்தை உடனடியாகநிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

2020 ஆம் ஆண்டளவில் இலங்கை பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் குறித்த முயற்சியை 2014 ஆம் ஆண்டில் அப்போதைய பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக் ஷ தொடங்கினார்.

20ஆயிரம் கறவைப் பசுக்களை இறக்குமதி செய்ய 2014 ஆம் ஆண்டில் கடந்த அரசின் கீழ் 73 மில்லியன் டொலருக்கான ஒப்பந்தம் ஆஸ்திரேலியாவின் 'வெல்லார்ட் ரூரல் எக்ஸ்போர்ட்ஸ்' நிறுவனத்துடன் கையெழுத்தானது.

இந்தத் திட்டத்தை பின்னர் அமைச்சர் பி. ஹாரிசன் புதுப்பித்தமையை தொடர்ந்து, அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவினால் தொடரப்பட்டது.

2017 மார்ச் 24 அன்று இந்த திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததைத் தொடர்ந்து, 2017 மே 12 அன்று நியூசிலாந்திலிருந்து 2ஆயிரம் கறவைப் பசுக்களையும், 2017 டிசெம்பரில் ஆஸ்திரேலியாவிலிருந்து 3ஆயிரம் கறவைப் பசுக்களையும் அரசு இறக்குமதி செய்தது.

இதன்பின்னர் விவசாயிகளின் கடுமையான எதிர்ப்பால் இந்தத் திட்டம் கடந்த அரசால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்று அகில இலங்கை கமநல சம்மேளனம் தெரிவித்தது.

எனவே கடந்த திட்டத்தின் விளைவாக நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அவர் அரசிடம் கேட்டுக் கொண்டார். (த)

# தொண்டமானின் அமைச்சுகள் மஹிந்தவின் கட்டுப்பாட்டுக்குள்

கொழும்பு, ஜூன் 2

சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சராக பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ முன்னிலையில் அவர் குறித்த அமைச்சுப்பதவியைப் பொறுப்பேற்றார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சராக மறைந்த ஆறுமுகன் தொண்டமான் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# இரண்டாம் அலையில் அவதானம் அவசியம்

கொழும்பு, ஜூன் 2

நாட்டில் இரண்டாம் கட்ட கொரோனா வைரஸ் தாக்கம் உருவாவதை தவிர்த்துக் கொள்ளும் வகையில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது முக்கியம் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாடு மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ள நிலையில் கொரோனா வைரஸ் தொற்று இரண்டாவது அலை உருவாகலாம் என்றும் அதனைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அரச அதிகாரிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (ம)

# ஜனாதிபதி ஆணைக்குழுவில் நிஷங்க சேனாதிபதி முன்னிலை

கொழும்பு, ஜூன் 2

எவன்கார்ட் நிறுவனத்தின் தலைவரான நிஷங்க சேனாதிபதி, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையானார்.

அவன்கார்ட் நிறுவனத்தை தன்னிச்சையான முறையில் கையகப்படுத்தியதால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து அவரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, குறித்த ஆணைக்குழுவில் நேற்று அவர் முன்னிலையானார். (ம)

பொதுத்தேர்தலுக்கு பின்னரே

# இ.தொ.காவுக்கு புதிய தலைவர் நியமனம்!

கொழும்பு, ஜூன் 2
ஆறுமுகன் தொண்டமானின் மறைவையடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னரே புதியவர் நியமிக்கப்படுவார் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அதுவரையில் முடிவுகளை எடுப்பதற்காக ஐவரடங்கிய இடைக்கால நிர்வாகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இ.தொ.காவின் ஆலோசகர் முத்து சிவலிங்கம், பொதுச்செயலாளர் அனுஷியா சிவராஜா, சட்டத்தரணி மாரிமுத்து, உப தலைவர் செந்தில் தொண்டமான், நிதிச் செயலாளர் ரமேஷ் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கவுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் புதிய தலைவர் நியமிக்கப்பட்டால் அது கட்சிக்குள்ளும், தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதாலேயே, தேர்தலின் பின்னர் நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொண்டமான் குடும்பத்தில் இருந்தே ஒருவர் தலைமைப்பதவிக்கு வரவேண்டும் என டில்லியும், கொழும்பும் விரும்புவதால் அக்கட்சியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கப்படாது என்றும், பெரும்பாலும் ஜீவன் தொண்டமானே அடுத்த தலைவராகத் தெரிவாகக்கூடும் எனவும் அறியமுடிகின்றது.

இதற்கிடையில் தலைமைத்துவத்துக்காகப் போட்டி நிலவுவதாகவும் தெரியவருகின்றது. (ப)

# விவசாயப் பொருள்களை இடமாற்ற ரயில்களைப் பயன்படுத்தத் திட்டம்



கொழும்பு, ஜூன் 2
**நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் அரிசி, பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளை ஏனைய பிரதேசங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு ரயில்களை பயன்படுத்த தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

மேற்படி விடயம் தொடர்பில் ரயில்வே பொது முகாமையாளருடன் கலந்துரையாடியுள்ள அமைச்சர் அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு ரயில்வே பொது முகாமையாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். மரக்கறி, பழங்கள் உள்ளிட்ட உற்பத்திப் பொருள்களை போக்குவரத்து செய்வதற்காக விவசாயிகள் பெருமளவு பணத்தை செலவிடுவதுடன் அவைகள் பழுதடைவதற்கும் அது காரணமாகின்றது. ரயில்களில் அவற்றை போக்குவரத்து செய்யும்போது பெருந்தொகையான பழங்கள் மற்றும் மரக்கறிகளை ஒரே தடவையில் கொண்டுசெல்ல முடியும் என்பதுடன் பழுதடைவதையும் தவிர்த்துக்கொள்ளலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



யாழ்ப்பாணம் நெடுங்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கொழும்புத்துறைத் துறைமுகம் அமைந்த பாதையில் மின்கம்பம் நடுகை செய்யும் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க)

## ஹெரோய்னுடன் மூவர் கைதாகினர்

தென்மராட்சி, ஜூன் 2
தென்மராட்சிப் பிரதேசத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நாவற்குழியைச் சேர்ந்த இருவரையும் சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த ஒருவரையும் சாவகச்சேரி பொலிஸார் அண்மையில் கைது செய்தனர்.

நாவற்குழியில் கைது செய்யப்பட்ட இருவரிடமும் தலா 62 மில்லிகிராம் ஹெரோய்னும் வீதியில் கைது செய்யப்பட்டவரிடம் 34 மில்லிகிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டது.

இந்த மூவரையும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் 12ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார். (ம -9)

# சட்டத்தை இயல்பாகவே மீறிப்பழகியோர் தற்போது எப்படியும் நடந்துகொள்ளலாம்

*நாட்டின் நிலை இது என்றார் துரைசிங்கம்*

மட்டக்களப்பு, ஜூன் 2
சட்டத்தை இயல்பாகவே மீறிப்பழகியவர்களும், அதிகாரத்தைப் பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்தவர்களும் தாங்கள் விரும்பியவாறெல்லாம் நடந்துகொள்ளலாம் என்ற நிலைமையே தற்போது நாட்டில் உள்ளது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் நடைபெறுகின்ற தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் தெரிவிப்பதற்கு கண்காணிப்புக் குழுக்கள் இருக்கின்றமை அவசியம். தற்போது நாட்டில் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் இதுவரை தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படவும் இல்லை, மாவட்டங்களுக்கு அனுப்பப்படவுமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் நிலைமைகளில் அரசாங்க தரப்பினரினால் மேற்கொள்ளப்படுகின்ற தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பிலும், கொரோனா சட்டங்கள் பிரயோகிக்கப்படுகின்ற முறைமை தொடர்பிலும் நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
இலங்கையில் தற்போது சட்டங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றமை தொடர்பிலே மிகப் பெரிய தெளிவின்மை ஏற்பட்டிருக்கின்றது. ஆலயங்கள், மசூதிகள், விகாரைகள், தேவாலயங்கள் என்பவற்றிலே சுகாதார ஒழுங்கு விதிகள் பேணப்பட வேண்டும் என்பதற்காக கடுமையான கண்காணிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிகக் குறைந்தளவினர் அதுவும் பூசைகளோடு தொடர்புள்ளவர்கள் மாத்திரம் வணக்கத்தளங்களில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

இதேவேளை கொழும்பு செட்டித் தெருவிலே இரகசியமாகத் தொழுகையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அனைவரும் பொலிஸாரின் வாகனத்தில் மிக நெருக்கமாக ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டமையைக் காணொலிகளில் கண்டோம். முள்ளிவாய்க்கால் தினத்தை தமிழ் மக்கள் அனுஷ்டித்த பொழுது சுகாதார நடைமுறைகள் மீறப்படும் என்பது தொடர்பாக நீதிமன்றக் கட்டளைகள் பெறப்பட்டன. நான்கு ஐந்து பேர் ஈகச்சுடரேற்றிய போது அவர்கள் தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டார்கள். இதேவேளை மே 19இல் நடைபெற்ற அரசின் போர் வெற்றி விழாவில் முப்படைகளின் தளபதியும், நாட்டின் தலைவருமான ஜனாதிபதி படைத்தளபதிகள், இன்னும் சில மேலுத்தியோகத்தர்கள் முகக் கவசமின்றியே அந்த நிகழ்வுகளில் ஈடுபட்டார்கள்.

அத்துடன், அமைச்சர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமூக இடைவெளியைப் பராமரிக்கவில்லை என்பது காணொலிக் காட்சிகள் மூலம் தெரிய வருகின்றது. ஆனால், அவரது பூதவுடல் கொட்டகலையில் வைக்கப்பட்டிருந்த போது மக்கள் சுகாதார இடைவெளியை பராமரிக்கவில்லை என்பதற்காக ஊரடங்கை அமுல்படுத்தி அஞ்சலி செய்ய வந்த மக்கள் தடுக்கப்பட்டிருக்கின்றார்கள். இவை கொரோனாத் தொற்று தொடர்பான சுகாதார விதிகள் யார் யாரால் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றன.

அதேவேளை தற்போது நாட்டில் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் இதுவரை தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படவும் இல்லை, மாவட்டங்களுக்கு அனுப்பப்படவுமில்லை. ஆனால் அரசாங்கக் கட்சியினர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைத் தொடக்கி வைப்பதும், திறந்து வைப்பதுமான நிகழ்வுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பல இடங்களில் தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலைமை வெளிப்படையாகவே ஜனநாயக மீறல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகின்ற அதேவேளை எதிர்காலத்தில் ஆதிக்க சக்திகளின் விருப்பத்துக்கு ஏற்ப சட்டங்கள் செயலிழந்து விடுமோ? என்ற அச்சத்தையும் ஏற்படுத்துகின்றது. இது தொடர்பில் ஜனநாயகத்தை நிலைநாட்ட விரும்புகின்ற எல்லா சக்திகளும் அக்கறை கொண்டு நாட்டை சட்ட ஆட்சிக்குள் கொண்டுவருகின்ற செயற்பாடுகள் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகும்- என்றார். (ப-150)

# சங்கானை மருத்துவமனைத் தாக்குதல் மூன்று சந்தேகநபர்கள் நேற்றுக் கைது

கொழும்பு, ஜூன் 2
யாழ்ப்பாணம் சங்கானை பிரதேச மருத்துவமனைக்குள் நேற்றுமுன்தினம் புகுந்து தாக்குதல் நடத்தினர் என்ற சந்தேகத்தில் மூன்று சந்தேக நபர்கள் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

மருத்துவமனைக்குள் நேற்றுமுன்தினம் மாலை சிலர் உள்நுழைந்து அங்கு பணியாற்றும் ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்ததாக தெரிவித்து மூன்று மோட்டார் சைக்கிளில் 4 பேர் வைத்தியசாலைக்குள் உள்நுழைந்துள்ளனர். இதன்போது பாதுகாப்பு அலுவலர் கொரோனா நிலைமை காரணமாக காயப்பட்டவருடன் எல்லோரும் உள்ளே சிகிச்சைக்கு அழைத்துச் செல்ல முடியாது என்று தெரிவித்துள்ளார். இந்த விடயம் வாக்குவாதமாக மாறியுள்ளது. இதையடுத்து அந்தக் குழுவால் பாதுகாப்பு அலுவலரும், மருத்துவமனை ஊழியர் ஒருவரும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதையடுத்தே மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

# படைகளுக்கு ஒரு சட்டம் மக்களுக்கு வேறு சட்டமா?

## வனவளப் பிரிவினரிடம் கேள்வியெழுப்புகிறார் சிவமோகன்

**வவுனியா, ஜூன் 2**

**வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொதுமக்களின் பல ஏக்கர் காணிகளை விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்காக படையினர் கையகப்படுத்தி வேலியிட்டுள்ளனர். இதற்கு நடவடிக்கை எடுக்காத வனவளப்பிரிவு, தமிழ் மக்கள் தங்களுக்கே உரித்தான காணிகளை தமிழ் மக்களே அபிவிருத்திசெய்ய முற்படும்போது அவர்களுக்கு இடையூறு செய்து நீதிமன்றங்கள் மூலம் வழக்குத் தொடுத்து வருவது எதற்காக?**

இவ்வாறு கேள்வியெழுப்பிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், இலங்கையின் நீதி படையினருக்கு ஒன்றாகவும் தமிழ் மக்களுக்கு வேறாகவும் உள்ளது என்பதையே இது காட்டுகின்றது. இது பற்றி உரியவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வனவளப் பிரிவு தமிழ் மக்களின் காணிகளைப் பிடித்து படையினருக்கு வழங்கும் தரகு வேலையை செய்துவருகின்றது.



இது இன நல்லிணக்கத்துக்கு ஆரோக்கியமான விடயம் அல்ல என்பதை சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தற்போது படையினரால் அடாத்தாக பிடிக்கப்பட்டிருக்கும் காணிகள் முழுவதும் பொதுமக்களின் பூர்வீக வாழ்விடங்கள். வனவளப் பிரிவினரின் ஒத்துழைப்போடு இவை படையினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் விவசாயம் தோட்டப்பயிர் செய்வதானால் சிங்களப்பகுதிகளில் செய்யட்டும். தமிழர் நிலம் தமிழர்களுக்கே சொந்தமானது. இங்கு தொழில் வாய்ப்பில்லாமல் தமிழ் மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது படையினர் எமது வளங்களை சுரண்டிச் செல்ல அனுமதிக்க முடியாது.

எனவே செட்டிகுளம் ஆண்டியா புளியங்குளத்தில் படையினர் அபகரித்த காணிகளை உடனடியாக பொதுமக்களிடம் ஒப்படைக்க வேண்டும்- என்றார்.

(து-110,18)





# யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட 39 ஆவது ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

20 ஆம் நூற்றாண்டின் 'தமிழ் கலாசார இனப்படுகொலை' என்று கூறப்படும் யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட 39 ஆவது ஆண்டு நினைவுதினத்தையொட்டி யாழ்ப்பாண பொது நூலகத்தில் நேற்று அஞ்சலி நடைபெற்றது.

யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டபோது உயிரிழந்தவர்களுக்கு யாழ்ப்பாண மாநகர சபையின் ஏற்பாட்டில் பதில் முதல்வர் தலைமையில் நூலக வளாகத்தில் அஞ்சலி நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர், செயலாளர், ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, நூலகம் எரிக்கப்பட்ட நினைவு நாள் நிகழ்வு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையிலும் பொதுநூலக பிரதான வாயில் முன்பாக நேற்று அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(து-111)

# மனித உடலுக்குள் புகுந்துகொண்டிருக்கும் பிளாஸ்ரிக் கழிவுகள்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

கடற்கரைகளில் குவிந்து கிடக்கும் பிளாஸ்டிக் கழிவுகள் மைக்ரோ பிளாஸ்டிக்குகளாக மாறி உணவின் ஊடாக மனித உடலில் உட்புகுந்துவிடுகின்றன என்று அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய இரசாயன வேதிப்பொருள்களை உறிஞ்சும் நுண்ணுயிரிகள் தென் மாகாணம் மற்றும் நீர்கொழும்பு கடற்பரப்பில் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாரா நிறுவனம் நடத்திய ஆய்விலேயே குறித்த விடயம் தெரியவந்துள்ளது.

பொதுமக்கள் பிளாஸ்ரிக் பொருள்களை பயன்படுத்திவிட்டு கடற்கரையோரங்களிலும் ஏனைய இடங்களிலும் கைவிட்டும் வீசிவிட்டும் செல்கின்றனர். இது ஆபத்தானது என்று பல தடவைகள் கூறப்பட்டுவிட்டபோதும் அதை சகலரும் கடைப்பிடிப்பதில்லை.

இந்தநிலையில், அவை சிறு துணிக்கைகளாக (மைக்றோ பிளாஸ்ரிக்) சிதைந்து பல வழிகளிலும் உணவுடன் சேர்ந்து மனித உடலுக்குள் புகுந்துவிடுகின்றன என்று அறிவியல் ரீதியாகக் கண்டறியப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# கல்விப் பணிப்பாளராக மன்சூர் கடமையாற்றலாம்

## திருமலை மேல்நீதிமன்று தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 2

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளராக எம்.ஐ.எம்.மன்சூர் தொடர்ந்தும் கடமையாற்ற முடியும் என்று திருகோணமலை மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்றம் நீதிபதி மா.இளஞ்செழியன் இந்த தீர்ப்பை வழங்கினார்.

கிழக்கு மாகாண ஆளுநராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் செயற்பட்ட காலத்தில் மாகாண பணிப்பாளராக எம்.ரி.எம். நிஸாம் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், இந்த நியமனத்துக்கு எதிராக மன்சூர் திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

(து)

# ஜோர்தானில் வசிக்கும் இலங்கையர்கள் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லை!

கொழும்பு, ஜூன் 2

ஜோர்தானில் வசிக்கும் இலங்கையர்கள் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லை. அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

ஜோர்தானில் கொரோனாத் தொற்று காரணமாக தொழில் வாய்ப்பினை இழந்துள்ள இலங்கையர்களின் குடும்பங்களுக்கு இலங்கை தூதரகத்தினால் உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நிதிஉதவியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இதுவரையான காலப்பகுதியில் சுமார் 576 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றுக் காரணமாக ஜோர்தானில் உள்ள 46 இலங்கையர்கள் தொழில்வாய்ப்பினை இழந்துள்ளனர். எவ்வாறாயினும் ஜோர்தானில் உள்ள இலங்கையர்கள் எவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை - என்றுள்ளது.

(ம)

# தென்மராட்சியில் 1,377 பேருக்கு கொடுப்பனவு வழங்கவேண்டும்

சாவகச்சேரி, ஜூன், 2

தென்மராட்சியில் இதுவரை 13 ஆயிரத்து 378 பேருக்கு இரண்டாம் கட்ட சமூக நலக் கொடுப்பனவுகள் பிரதேச சமுர்த்தி வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் ஆயிரத்து 377 பேருக்கான கொடுப்பனவு வழங்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை சமுர்த்தி திணைக்களத்தால் ஒருதொகுதி நிதி அனுப்பப்பட்டதையடுத்து சனி, ஞாயிறு தினங்களில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. கைதடியில் 309 பேருக்கும் சாவகச்சேரியில் 45 பேருக்கும் கொடிகாமத்தில் 905 பேருக்கும் வரணியில் 118 பேருக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன என்றும் கட்டுநிதி கிடைத்ததும் விரைவில் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் சமுர்த்தி பயனாளிகள் 7 ஆயிரத்து 645 பேருக்கும் காத்திருப்போர் பட்டியலில் 2 ஆயிரத்து 83 பேருக்கும் ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 6 ஆயிரத்து 481 பேருக்கும் மேன்முறையீடுசெய்த 546 பேருக்குமென 16 ஆயிரத்து 755 பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவாக தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(து-9)

பல்வேறு விடயங்கள் தொடர்பில் மனம் திறந்து 'உதயன்' பத்திரிக்கைக்காக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் வழங்கிய நேர்காணல்.

# தமிழன் என்பதாலேயே என் மீது தாக்குதல்கள்!



சந்திப்பு: டிலீப்அமுதன்

**கே: கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலும் எப்போது நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும் என்ற கேள்வியே மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஆணைக்குழு உறுப்பினர் என்ற அடிப்படையில் இதற்கான உங்கள் பதில் என்ன?**

ப: உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரையில் இது தொடர்பில் பேசுவதில்லை என்று ஆணைக்குழுவில் தீர்மானித்துள்ளோம். இந்த வாரம் சிறந்த முடிவு வரலாம் என்று எதிர்பார்க்கின்றோம்.

**கே: தேர்தல் நடத்துவது தொடர்பில் உயர் நீதிமன்றத் தீர்ப்பில் ஆணைக்குழு தங்கியிருப்பதன் காரணம் என்ன?**

ப: நாடாளுமன்றக் கலைப்பு, தேர்தல் நடத்துதல், புதிய நாடாளுமன்றம் கூடும் நாளை அறிவித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஜனாதிபதியின் வர்த்தமானியை இரத்துச் செய்யுமாறு நீதிமன்றிடம் கோரியிருக்கின்றார்களே?

**கே: உயர் நீதிமன்றத்திடமிருந்து தேர்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான இடைக்காலக் கட்டளையோ அல்லது வேறு எந்த உத்தரவுகளும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. தேர்தல்கள் ஆணைக்குழுவை பிரதிவாதியாக நீதிமன்றம் ஏற்று உங்களை விசாரணைக்கு அழைக்கவுமில்லை. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரிக்கலாமா இல்லையா என்பது தொடர்பிலேயே இப்போது விவாதம் நடந்து கொண்டிருக்கின்றது. அப்படியிருக்கையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏன் எதிர்பார்த்திருப்பதாகச் சொல்கின்றீர்கள்?**

ப: நீதிமன்றம் எங்கள் நிலைப்பாட்டையும் கேட்டறிந்துள்ளது. எனவே எங்களை நீதிமன்றம் அழைக்கவில்லை என்று சொல்ல முடியாது. அதன் பிரகாரம் தீர்ப்புக் கிடைக்கும் என்றுதான் நான் எதிர்பார்க்கின்றேன்.

**கே: மனுதாரர்கள் ஆணைக்குழுவை பிரதிவாதிகளாகப் பெயரிட்டமையால்தானே மன்றில் முன்னிலையாகினீர்கள். நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு ஏற்று உங்களுக்கு அழைப்பு அனுப்பவில்லையே?**

ப: வழக்குச் செல்லும் விதத்தில், அந்த வழக்கை விசாரணைக்கு நீதிமன்றம் ஏற்கும்போல்தான் தோன்றுகின்றது.

**கே: பொதுத் தேர்தல் நடத்துவதை காலம் கடத்துவதற்காக உயர் நீதிமன்றத் தீர்ப்பில் தங்கியிருப்பதாக ஆணைக்குழு தெரிவிப்பதாக ஏன் சொல்ல முடியாது?**

ப: நாங்கள் அப்படியானதொரு நோக்கத்தில் செயற்படவில்லை. தேர்தலை விரைந்து நடத்தவே விரும்புகின்றோம். அதேநேரத்தில் பாதுகாப்பானதாக நடத்தவேண்டும் என்று சிந்திக்கின்றோம்.

**கே: கொரோனாவுடன் வாழவேண்டிய நிலைமையே காணப்படுவதாக உலக சுகாதார நிறுவனம் கூட கூறிவிட்டது. எந்தக் காலத்தில் தேர்தலை நடத்தினாலும் கொரோனாவின் தாக்கம் அல்லது பாதிப்பு இருக்கத்தான் போகின்றது. எனவே தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தவேண்டிய தேவை உள்ளதா?**

ப: சிலவற்றை மாற்றத்தான் வேண்டும். அவ்வாறு மாற்றம் செய்யக் கூடியவை தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம். கடந்த வாரம் கூட பெந்தோட்டையில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டிருந்தது.

> **நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மீளவும் கூட்ட முடியும். ஜனாதிபதி அவ்வாறு செய்தால் சட்டங்களில் திருத்தங்களைச் செய்யலாம். நாடாளுமன்றம் கூட்டப்படாது போனால் சட்டத்தை மீறாமல் எமது வழிமுறைகளை எப்படி மாற்றித் தேர்தலை நடத்தலாம் என்பது தொடர்பில்தான் நாங்கள் ஆராயவேண்டியிருக்கும்.**

**கே: சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதானால் அல்லது உருவாக்குவதானால் சட்டவாக்க சபையான நாடாளுமன்றம் இருக்கவேண்டும். நாடாளுமன்றம் இல்லாத இந்தச் சூழலில் எப்படி அதனைச் செய்யப் போகின்றீர்கள்?**

ப: நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மீளவும் கூட்ட முடியும். ஜனாதிபதி அவ்வாறு செய்தால் சட்டங்களில் திருத்தங்களைச் செய்யலாம். நாடாளுமன்றம் கூட்டப்படாது போனால் சட்டத்தை மீறாமல் எமது வழிமுறைகளை எப்படி மாற்றித் தேர்தலை நடத்தலாம் என்பது தொடர்பில்தான் நாங்கள் ஆராயவேண்டியிருக்கும்.

**கே: சட்டங்களில் திருத்தம் செய்யாமல் கொரோனாப் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பின்பற்றி தேர்தல் நடத்துவதில் சிரமங்கள் ஏதாவது இருக்குமா?**

ப: ஆம். நிறைய சிரமங்களை நாங்கள் எதிர்கொள்ளவேண்டியிருக்கும். செலவுகள் அதிகரிக்கும்.

**கே: இனித் தேர்தலை நடத்துவதானால் செலவு அதிகரிக்கும் என்கின்றீர்கள். அரசோ, பணம் இல்லை என்று சொல்கின்றது. இப்படியொரு நிலைமையில் தேர்தலுக்கு திட்டமிட்டு ஒதுக்கிய நிதியை விட அதிகளவான நிதி தேர்தலை நடத்தத் தேவை என்றால் அரசு வழங்கும் என்று எதிர்பார்க்கின்றீர்களா?**

ப: கிடைக்கும் என்றுதான் நம்புகின்றேன். இவ்வாறான நிலைமையில் வெளிநாடுகளும் உதவி செய்யலாம். இது ஆலோசிக்கப்படவேண்டிய விடயம். தேர்தலை நடத்தச் சொன்னால் அதற்குரிய செலவுகளை அவர்கள் தரத்தான் வேண்டும்.

**கே: நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபைகள் இல்லை. நாடாளுமன்றமும் மூன்று மாதங்களாக இல்லை. ஜனநாயகம் செத்துவிட்டது என்று கருத முடியாதா?**

ப: நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு இன்னமும் மூன்று மாதங்கள் முடியவில்லை. அதற்கிடையில் நீதிமன்றத் தீர்ப்புக் கிடைத்து எல்லாம் சரியாகும் என்று நம்புகின்றேன்.

**கே: மாகாணசபைத் தேர்தல் நடத்துவதற்குரிய அழுத்தங்களை ஆணைக்குழு கடந்த ஆண்டு உரிய வகையில் பிரயோகித்ததாக நம்புகின்றீர்களா?**

ப: ஆம். தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தனது பதவியைத் துறக்கப் போவதாகச் சொன்னதும் ஒரு வகை அழுத்தம்தான். அப்போதைய அரசு வில்லங்கமாக தேர்தலை நடத்தவில்லை. அது மிகப்பெரிய தவறு. அதுதான் தற்போதைய நிலைமைக்கும் வழிவகுத்துள்ளது.

(மறுபக்கம் பார்க்க)

**கே: தேர்தல்கள் ஆணைக்குழு ஜூன் 20ஆம் திகதியை நிர்ணயம் செய்யும்போது, தேர்தல் சட்டத்தை மாத்திரம் பார்த்து முடிவெடுத்துள்ளது. அரசமைப்பை இதில் நீங்கள் மீறியுள்ளீர்களே?**

ப: அரசமைப்பை நாங்கள் மீறவில்லை.
ஜூன் 2ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடுவது முடியாத காரியமாக இருந்தது. முடியாத காரியத்தை எங்களைச் செய்யச் சொல்லுமாறு நெருக்குதல் கொடுத்தால் எம்மால் அதனை எப்படிச் செய்யமுடியும்?
இதனால்தான் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு நாம் கடிதம் அனுப்பினோம். ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூடக் கூடிய சூழல் இல்லை. எனவே உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெறுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அறிவுறுத்தினோம். அதை அவர் நிராகரித்திருந்தார்.

**கே: நீங்கள் கூறுவதன் அடிப்படையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அரசமைப்பை மீறியுள்ளார் என்று கருதலாமா?**

ப: அப்படித்தான் நான் கருதுகின்றேன்.

**கே: தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏன் எழுந்துள்ளன?**

ப: முரண்பாடு என்று சொல்லமாட்டேன். கருத்து வேறுபாடுதான் இருக்கின்றது.

**கே: கருத்து வேறுபாட்டுக்கு என்ன காரணம்?**

ப: அவர் முன்பு அதிகாரம் நிறைந்த ஆணையாளராக இருந்தவர். எல்லாத் தீர்மானங்களையும் அவர் தனித்து எடுத்துக் கொண்டிருந்தார். இப்போது அப்படியல்ல. ஆணைக்குழுதான் முடிவு எடுக்கவேண்டும். அவர் இந்தப் புதிய நிலைப்பாட்டுக்கு இப்போதுதான் பழக்கப்பட்டு வருகின்றார். முன்னர் நிறைவேற்று ஆணையாளராக இருந்தவரை, ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்தமை தவறு. ஆணைக்குழு தவிசாளரை மாத்திரம் குறைகூறமாட்டேன். அதிகாரிகளும் இந்த விடயத்தில் தவறிழைக்கின்றார்கள். ஆணைக்குழுவில் மூவருக்கும் சமனான தகுதி நிலையே உள்ளது. ஆனால், அதிகாரிகள் எல்லா விடயத்தையும் தவிசாளருடன்தான் பேசிச் செய்வார்கள். ஆணைக்குழுவின் உறுப்பினர்களான என்னுடனோ, அபயசேகரவுடனோ பேசமாட்டார்கள். தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் பலவற்றை நான் ஊடகங்களில் பார்த்துத்தான் தெரிந்து கொள்கின்றேன். எங்களுடன் கலந்துரையாடி அந்தத் தீர்மானங்கள் எடுப்பதில்லை. இதுதான் கருத்து வேறுபாடுகளுக்கான அடிப்படைக் காரணம்.

**கே: ஆணைக்குழுத் தவிசாளர் திட்டமிட்டு மறைக்கின்றார் என்கின்றீர்களா?**

ப: ஆணைக்குழுத் தவிசாளர் மோசமானவரோ, பிழையான ஒருவரோ இல்லை. எந்த உதவி யார் கேட்டாலும் செய்யக் கூடிய ஒருவர்.

**கே: ஆணைக்குழுத் தவிசாளர் அண்மைக்காலமாக கோத்தாபய அரசுக்குச் சார்பாக நடப்பதைப் போன்ற தோற்றப்பாடு உள்ளதே?**

ப: அவர் தேவையில்லாமல் எல்லோருடனும் பேசுவதால் வரும் பிரச்சினை. எல்லோருடனும் பேசுவது ஆணைக்குழுத் தவிசாளருக்கு நல்லது இல்லை.

**கே: ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இரட்டைக் குடியுரிமையை வைத்திருந்த ஒருவர். அவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிக் கொண்டதாகக் கூறப்பட்டது. ஆனால் அவரது பெயர் நீக்கப்பட்டமைக்கான பட்டியல் அண்மையில்தானே வெளியாகியிருந்தது. அவர் அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிய ஆவணங்கள் சரியானதா?**

ப: ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக் கோருவதற்கு முன்னதாக ஆணைக்குழுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கோத்தாபய ராஜபக்ஷ அவரது சட்டத்தரணி அலி சப்ரி உள்ளிட்ட மூவர் வந்தார்கள். ஆணைக்குழுவைச் சந்திப்பதற்கான முன்அனுமதியை அவர்கள் பெற்றிருக்கவில்லை. தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் அனுமதி பெற்றிருந்தார்களோ தெரியாது.
வந்தவர்கள், கோத்தாபய ராஜபக்ஷவின் அமெரிக்கக் குடியுரிமை நீக்கப்பட்டமை தொடர்பான ஆவணங்களை எடுத்து மேசையில் போட்டனர். நான் அவற்றை கவனமாகப் பார்த்தேன். தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவோ, உறுப்பினர் அபயசேகரவோ அதனை ஆழமாகப் பார்க்கவில்லை. நான் பார்த்துவிட்டு அவர்களிடம் ஒப்படைத்தேன். அவர்கள் அதன் பிரதி வேண்டுமா என்று கேட்டார்கள்.



இதன் பின்பு நான் வேறு ஒரு தரப்பு ஊடாகத் தகவல் ஒன்றை அறிந்தேன். ஆணைக்குழுத் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, கோத்தாபய ராஜபக்ஷவுக்கு 5 வெவ்வேறு தரப்புக்கள் ஊடாகத் தகவல் ஒன்றை அனுப்பினார். அதாவது இரட்டைக்குடியுரிமை தொடர்பான விவகாரத்தில் நான் (ஹூல்) ஒருவரே அதிக கரிசனையுடன் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார். அதனைத் தான் (மஹிந்த தேசப்பிரிய) பார்த்துக் கொள்ளுவார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
இதனை ஆணைக்குழுவின் தவிசாளரிடம் நான் நேரடியாகக் கேட்டபோது மறுத்திருந்தார். இவ்வாறான புனைகதைகளை நம்பவேண்டாம் என்று சொன்னார். சில காலங்களின் பின்னர் ஜனாதிபதியின் சட்டத்தரணி அலி சப்ரி, மஹிந்த தேசப்பிரியவுடனான உரையாடல் அடங்கிய ஒலிப்பதிவொன்றை வெளியிட்டிருந்தார். அதில் நான் கூறிய விடயம் இருந்தது. இது தொடர்பில் தவிசாளரிடம் மீண்டும் கேட்டபோதும் அவர் அதனை மறுத்திருந்தார்.

**கே: கோத்தாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த ஆவணங்களின் உண்மைத்தன்மையை ஆணைக்குழு ஆராய்ந்ததா?**

ப: அவர் வேட்பாளர் இல்லை (எம்மைச் சந்தித்த காலம்) என்பதால் அது தேவையில்லை என்று சொன்னார்கள்.

**கே: வேட்பாளர் இல்லாத அல்லது வேட்பாளராக களமிறங்காத ஒருவர் ஏன் உங்களைச் சந்தித்து ஆவணங்களைக் காட்டவேண்டும்?**

ப: ஆவணங்களைக் காண்பிப்பதற்கான தேவையில்லைத்தான். ஆனால், அந்தக் காலத்தில் கோத்தாபய ராஜபக்ஷவின் குடியுரிமை தொடர்பில் பல செய்திகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தமையால் அவர் ஆவணங்களை எமக்குக் காண்பித்திருக்கலாம்.

**கே: வேட்புமனுவை அவர் தாக்கல் செய்த பின்னர், நாட்டின் தலைவராகுவதற்கு போட்டியிடும் ஒருவரின் தகுதி தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவேண்டிய பொறுப்பு ஆணைக்குழுக்கு இல்லையா?**

ப: இது ஆணைக்குழுவின் பொறுப்போ, வேலையோ இல்லை என்று ஆணைக்குழுவின் ஏனைய இருவரும் சொன்னார்கள். அவரது குடியுரிமை தொடர்பில் யாராவது ஆட்சேபனை தெரிவிக்கவேண்டும். ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டால்தான் அதனை அடிப்படையாக வைத்து நாங்கள் விசாரிக்க முடியும். அவரது குடியுரிமை தொடர்பில் ஆராய்ந்து விசாரிப்பதற்கு நான் ஆர்வம்காட்டக் கூடாது என்று அவர்கள் இருவரும் சொன்னார்கள். நான் இதில் ஆர்வம் காட்டுவது தேர்தல்கள் ஆணைக்குழு பக்கச் சார்பாகச் செயற்படுவது போன்றாகிவிடும் என்று குறிப்பிட்டார்கள். ஏனெனில் ஆட்சேபனை எழுப்பப்பட்டால் அது தொடர்பில் விசாரிக்கப்போவது நாங்கள் மூவரும் என்பதால், முன்கூட்டியே அந்த விடயத்தில் என்னை கரிசனை காட்டவேண்டாம் என்றார்கள்.

**கே: வேட்பாளர் ஒருவரின் தகுதி தொடர்பில் யாராவது முறைப்பாடு செய்தால்தான் ஆணைக்குழு விசாரிக்கும் என்பது ஒரு கேலிக்கூத்தான விடயமில்லையா?**

ப: என்னைப் பொறுத்தவரையில் அது கேலிக்கூத்தான விடயம்தான். ஆணைக்குழுவில் மூன்று பேர் இருக்கின்றோம். அதில் இருவர் எடுக்கும் தீர்மானம் அதுதான் பெரும்பான்மையானது. அதனுடன் நான் இணங்கித்தான் செல்லவேண்டும்.

**கே: ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவரில், நீங்கள் மாத்திரம்தான் அனைத்துத் தரப்புகளாலும் விமர்சிக்கப்படுகின்றீர்களே. ஏன்?**

சட்டரீதியாகச் செயற்பட வேண்டும் என்று சகல விடயங்களிலும் நினைப்பவன் நான். அதற்காக குரல் எழுப்புகின்றேன். அது பலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். மற்றொரு விடயம் தமிழனைத் தாக்குவது இலகு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட என்னை பாதுகாக்க முன்வரவில்லை. என் மீதான தாக்குதல்களுக்காக அவர்கள்கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. எனக்காக குரல் கொடுத்தது எல்லாம் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்தான்.

**கே: மிக முக்கியமான ஆணைக்குழு ஒன்றில் தமிழராக நீங்கள் இருப்பதால்தான் உங்கள் மீது தாக்குதல்கள், வசைமாரி பொழிவுகள் இடம்பெறுவதாக கருதுகின்றீர்களா?**

ப: தமிழன் ஒருவர் இவ்வாறான உயர் பதவியில் இருப்பது பெரும்பான்மையான சிங்களவர்களுக்கு விருப்பமில்லை. என்னை நீக்கவேண்டும் என்றுதான் அவர்கள் விரும்புகின்றார்கள். முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜெயசேகரகூட, புதிய நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்ததும் என்னை நீக்கப் போவதாக எச்சரித்திருந்தார்.

**கே: இது உங்கள் மீதான அச்சுறுத்தலில்லையா?**

ப: அச்சுறுத்தல்தான். "நாங்கள் சொல்வதைக் கேட்டுச் செயற்படுங்கள். எங்களில் பிழை கண்டுபிடிக்க வேண்டாம். அல்லது நீங்கள் தூக்கி வீசப்படுவீர்கள்" என்பதுதான் அவர்களின் செய்தி.

**கே: தனிமைப்படுத்தல் விதிமுறையை நீங்கள் மீறியதாக அண்மைக் காலமாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. அதை ஏற்றுக் கொள்கின்றீர்களா?**

ப: நான் ஏற்றுக் கொள்ளவில்லை. வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் தனிமைப்படுத்தல் முடிவடைந்த பின்னர் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்படவேண்டும் என்பதை, தனிமைப்படுத்தல் முடிவடைந்து வெளியேறும் போது வழங்கும் சான்றிதழில் குறிப்பிடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இவர்கள் வழங்கிய சான்றிதழில் அவ்வாறு எதுவும் குறிப்பி டப்படவில்லை. போதுமானளவு தனிமைப்படுத்தல் முடித்துவிட்டார் என்றுதான் சான்றிதழில் குறிப்பிட்டுள் ளார்கள். அதனை விட சான்றிதழில் திகதி கூட குறிப்பிடப்படவில்லை. சட்டத்தில் சொல்லப்பட்டதைக் கூட செய்யாத, திகதி குறிப்பிடாமல் கையெழுத்திடும் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டா நாம் தேர்தலை நடத்தவேண்டும்?

**கே: ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவி மீண்டும் உங்களுக்கு கிடைத்தால் ஏற்றுக்கொள்வீர்களா? அல்லது அதனை நாடி மீண்டும் செல்வீர்களா?**

ப: நான் ஒருபோதும் மீண்டும் நாடிச் செல்லமாட்டேன். ஆணைக்குழு உறுப்பினர் பதவி மீண்டும் கிடைக்காது என்றுதான் நம்புகின்றேன். உறுப்பினர் பதவி மீண்டும் எனக்குக் கிடைத்தாலும் நான் அதனை ஏற்கமாட்டேன். எனது குடும்பத்தினருக்கு அதில் உடன்பாடில்லை.

**கே: உங்கள் மீதான விமர்சனங்களால்தான் குடும்பத்தினர் விரும்பவில்லையா?**

ப: இவ்வாறான விமர்சனங்கள், அழுத்தங்கள் எனக்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அவர்கள் கூறும் பொய்யான கதைகளை மக்கள் நம்புகின்றார்கள். அல்லது மக்கள் நம்பும்விதமாக அதைச் சொல்கின்றார்கள்.

**கே: எதிர்காலத்தில் அரசியலில் களமிறங்கும் திட்டம் ஏதாவது இருக்கின்றதா?**

ப: சில விடயங்களில் நான் திறம்படச் செயற்பட முடியும் என்பது எனக்குத் தெரியும். அதே நேரத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கு எனக்குத் தகுதியில்லை. நான் இரட்டைப் பிரஜாவுரிமையுடையவன்.

**கே: கோத்தாபய ராஜபக்ஷகூட இரட்டைப் பிராஜாவுரிமையுடையவர்தான். தனது அமெரிக்கக் குடியுரிமையை நீக்கி தேர்தலில் போட்டியிட்டதைப் போன்று நீங்கள் உங்கள் அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிப் போட்டியிடலாம்தானே?**

ப: நான் எனது அமெரிக்கக் குடியுரிமை ஒருபோதும் நீக்கமாட்டேன். தற்செயலாக நான் இந்த நாட்டை விட்டு ஓடவேண்டி வந்தால் எனக்கு ஓர் புகலிடம் தேவை.

**கே: நாட்டைவிட்டு ஓடவேண்டிவரும் என்று ஏன் சொல்கின்றீர்கள்?**

ப: பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து [illegible] வளவு அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிரு[illegible]கின்றார்கள். மிரட்டுகின்றார்கள். இந்த நாடு போகும் தி[illegible]யில் என்னவும் நடக்கக்கூடும் என்பதுதான் நிலைமை[illegible] இந்த நாட்டில் கொலைகள், கடத்தல்கள் நடந்திருக்கின்ற[illegible] நான் ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலகி[illegible] பின்னர் எனக்குள்ள பாதுகாப்புக் குறையும். என் மீது தா[illegible]குதல் நடத்தினால் கூட யாரும் கண்டுகொள்ளமாட்டார்க[illegible] அமெரிக்கக் குடியுரிமைதான் எனக்குப் பாதுகாப்பு.

# திரிபோஷா தொழிற்சாலை பூட்டு: 300 தொழிலாளர்கள் பாதிப்பு



**கொழும்பு,ஜூன் 2**

**ஜாஎல பகுதியில் உள்ள திரிபோஷா தொழிற்சாலை மூடப்பட்டதால் அதில் பணியாற்றிய 300 தொழிலாளர்கள் கடந்த 3 வாரங்களாக வேலையிழந்து வீட்டில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கடந்த இரண்டு வாரங்களாக மக்காச் சோளம் இல்லாத காரணத்தால் திரி போஷா உற்பத்தியும் நிறுத்தப்பட் டுள்ளது.

இந்த நிலை தொடருமானால் குழந் தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார் களின் ஊட்டச்சத்து தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன என இலங்கை ஊட்டச்சத்து நிபுணர் கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## விடுதிகளில் நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 2

விடுதிகளில் திருமண நிகழ்வுகளை நடத்த நேற்று முதலாம் திகதி முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், ஹோட்டல்களில் மூன்றில் ஒரு பங்குடையவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட வேண் டும் என்றும் அவர்களுக்குள் 1.5 மீற்றர் சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் என்றும் அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சுற்று லாத் துறையை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மக்களுக்கு நிவாரணத்தை வழங்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது எனவும், செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அந்தவகையில், ஹோட்டல் ஊழியர்கள், பயண நிறு வனங்கள், சுற்றுலா முகவர் மற்றும் சுற்றுலாவைச் சார்ந்த மற்றவர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெறு வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். கொரோனா எனப்படும் கொவிட் 19 தொற்றுப் பரவலையடுத்து நிகழ்வுகள் மற்றும் வைபவங்கள் அனைத்தும் சுமார் 2 மாதங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

## வெளிநாட்டில் உள்ளவர்களை அரசு கௌரவமாக அழைத்துவரவேண்டும்

### முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன்.2

இலங்கை அரசு தனது கால தாமதமான செயற்பாட்டின் மூலம் செய்த பிழையை கடல் கடந்து சென்று நாட் டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகச் செயற்ப டும் வெளிநாட்டு தொழிலா ளர்கள் மீது சுமத்தி தப்பித் துக் கொள்ளாமல் அவர் களை உரிய முறையில் கௌரவமாக நாட்டுக்கு அழைத்து வர வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா கூறியுள்ளார்.

அண்மையில் அமைச்சர் ஒருவர், மத்திய கிழக்கு நாட் டில் இருந்து வந்தவர்களை வெடிகுண்டுகளாக வர்ணித் தமை தொடர்பில் தனது அதிருப்தியை சமூக வலைத் தளங்கள் ஊடாக வெளிப்ப டுத்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து கடல் கடந்து பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் சென்று தாய் நாட் டுக்கும், தங்களது வீட்டுக்கும் தன்னலமற்ற முறையில் பொருளாதார பங்களிப்புக் களை வழங்குகின்ற தியாகி களான நம்மவர்கள் உண் மையிலேயே உன்னத மான செயல் வீரர்கள். அந் நிய செலாவணியை எமக்கு வாரி வழங்கும் சத்தமில் லாத சாதனையாளர்கள். அப்படிப்பட்டவர்கள் தங்க ளது அன்பான உறவுகளை யும், தாய் நாட்டையும் விட் டுச் சென்று தியாகிகளாக பல தசாப்தங்களாக பல் வேறு கஷ்டங்களையும் துயரங்களையும் தாங்கிக் கொண்டு அந்நிய செலாவ ணியை வாரி வழங்கி தேசிய பொருளாதாரத்துக்குப் பல பங்களிப்புக்களை வழங்கி வருகிறார்கள், தாங்கள் தங் கள் குடும்பத்திற்காக உழைக்கச் சென்றாலும் , எத்தனையோ குடும்பங் களை மனிதாபிமானத் தன் மையுடன் வாழவும் வைத் துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறானவர்களை மிக வும் கரிசனையுடன் , அவர் கள் தாயகம் வந்து சேருவ தற்கு உதவ வேண்டுமே தவிர மாறாக அவர்களைக் கொரோனா தொற்றுக்காவி கள் என்றும் வெடிகுண்டு கள் என்றும், எங்களை வந்து அழிக்கப் பார்க்கிறார் கள் என்றும் சொல்வதன் ஊடாக அரசின் காலதாமத மான நடவடிக்கையின் வெளிப்பாட்டினை மூடி மறைக்கப் பார்க்கிறார்கள். நாட்டின் முன்னேற்றத்துக் குக் காரணமான தியாகிக ளான வெளிநாட்டுத் தொழி லாளிகள் மீது அவதூறு சொல்லி அவர்களை மலி னப்படுத்துவது ஏற்க முடி யாத அநாகரிகமான செய லாகும். அவர்களது அத் தனை தியாகங்களையும் பங்களிப்புக்களையும் ஒதுக்கி தள்ளி விட்டு அவர் களை ஒரு குற்றவாளி களைப் போல் சித்திரிப்பது அவர்களையும் அவர்களது உறவுகளையும் கொச்சைப் படுத்தும் செயற்பாடாகும். உலகளாவிய ரீதியில் பொருளாதார பின்னடை வுகளை எதிர் கொள்ளும் இந்தத் தருணத்தில் மத்திய கிழக்கு உட்பட ஏனைய நாடுகள் அனைத்தோடும் நல்லுறவைப் பேண வேண் டும், அவர்களோடு இணக் கத்தோடு செயற்பட்டு எமது நாட்டின் பிரஜைகளது நலன்களைப் பாதுகாக்கும் விடயத்தில் முன்மாதிரியுடன் செயற்படுவதே இன்றைய காலத்தின் தேவையாகும் , இதனைத் தவிர்த்து பொறுப்புமிக்க அமைச்சர் கள் பொறுப்பற்ற வகையில் கருத்துக்களை வெளியிடு கின்றமை ஆரோக்கியமான செயற்பாடாக அமையாது என்றார். (ப)

## ஆறுமுகன் தொண்டமானுக்கு திருகோணமலையில் அஞ்சலி

திருகோணமலை,ஜூன் 2

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகன் தொண் டமானுக்கு திருகோணமலையில் நேற்றுமுன்தி னம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருகோணமலையில் உள்ள தமிழர் சமூக ஜன நாயகக்கட்சியின் காரியாலயத்தில் கட்சியின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சத்தியன் தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட் டது. (ஐ-40)



## ஊடகவியலாளர் நடேசனின் 16 ஆவது நினைவுதினம்

மட்டக்களப்பு,ஜூன் 2

படுகொலைசெய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 16 ஆவது நினைவுதினம் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியத்தால் கடைப்பிடிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் பா. அரியநேத்திரன் மற்றும் ஊடகவியலாளர் கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-150)

## வறுமைக்குட்பட்டவர்களுக்கு உதவும் பல்கலை மாணவரின் முயற்சி வெற்றி

கிளிநொச்சி, ஜூன் 2

கொரோனா பரவலை அடுத்து நடைமுறைப்படுத்தப்பட்ட ஊர டங்கால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உதவி செய்வதற்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கலைப் பீட மாணவர் ஒன்றியம் புதிய முயற்சி ஒன்றை முன்னெடுத்து அதில் வெற்றியும் கண்டுள்ளது.



குறித்த மாணவர்களின் புதிய முயற்சியால் ஊடரங்கால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு உதவிகள் கிடைத்தமையுடன், தரிசு நிலங்க ளில் விவசாயம் செய்வோம் என்ற முன்னுதாரண செயற்பாட் டினையும் செய்து காட்டியுள்ள னர். நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக ஊட ரங்கு அமுல்படுத்தப்பட்டு அனைத்துச் செயற்பாடுகளும் முடக்கப்பட்டன. இதனால் பல குடும்பங்கள் வருமானங்களை இழந்து வறுமைக்குள் தள்ளப்பட் டன. வருமானம் இழந்த குடும் பங்களுக்கான உலர் உணவு களை வழங்கும் நடவடிக்கை களை மாணவர் ஒன்றியம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வழங்கியிருந்தது. இந்த நிலை யில் வறுமையில் வாடுபவர்க ளுக்கு உதவி செய்வதற்கான புதிய முயற்சி ஒன்றினை எடுத்து, அந்த முயற்சியை இளைஞர்கள் மத்தியில் முன்னுதாரணமாகக் காட்டுவதற்கு கலைப்பீட மாண வர் ஒன்றியத்தால் சில நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்க மாக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தி னால் கீரிமலை பகுதியில் காணப் பட்ட 10 பரப்பு தரிசு நிலத்தை மேம்படுத்தி அதில் விவாசாயச் செய் கையை முன்னெ டுத்து வந்தனர். அங்கு பயிரிடப்பட்ட மிளகாய், கீரை, கரட், பூசணிபோன்ற மரக்கறிகள் அறு வடை செய்யப்பட் டன. இவ்வாறு அறுவடை செய்யப் பட்ட மரக்கறிகள் அனைத்தும் ஊர் காவற்றுறையில் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கு வழங்கப்பட் டன.

இவ்வாறான புதிய முயற்சி ஒன்றி னைச் செய்து அதில் வெற்றி கண்ட மாணவர்கள் தெரிவித்த தாவது;

இலங்கையில் பல தரிசு நிலங் கள் காணப்படுகின்றன. அவற்றை இளைஞர்கள் கவனத்தில் கொண்டு விவசாய நடவடிக்கைக ளில் ஈடுபட வேண்டும். விவசாயத் துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் - என்றனர். (ப-6)

# தனியார் நிறுவன ஊழியர்களின் வேலை நேரத்தை மாற்றவும்

### போக்குவரத்து அமைச்சர் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 2

அரச மற்றும் தனியார் ஊழியர்களின் வேலை நேரத்தை மாற்றுமாறு திணைக்கள அல்லது நிறுவன பிரதானிகளிடம் கோரிக்கை விடுப்பதாகத்தெரிவித்தபோக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர, வேலை நேரத்தை மாற்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் எந்த சந்தர்ப்பத்திலும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தயாராகவிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் கொரோனா பரவல் உக்கிரமடைந்துள்ளது. பாடசாலை சேவையில் ஈடுபடும் பஸ்களும் வழமையான பாதைகளிலேயே பயணிக்கும்.

எனவே, அது தொடர்பில் தற்போது வேறுபட்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை போக்குவரத்து சேவையை எவ்வாறு பாதுகாப்பாக முன்னெடுப்பது என்பது பற்றி கல்வி அமைச்சருடனும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாங்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் வேலைநேரம் மாற்றப்பட்டால் இரவு வேலைகளானாலும்கூட எம்மால் முறையான போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்யமுடியும்- என்றார். (த)

# வெளிநாடுகளில் பணியாற்றியோரில்

# 37,500 இலங்கையர் தொழில் இழந்தனர்

கொழும்பு, ஜூன் 2

**வெளிநாடுகளில் பணியாற்றிவந்த 37ஆயிரத்து 500 இலங்கையர்கள் தங்கள் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர் என்று அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.**

கொரோனா வைரஸ் தொற்று உலகம் முழுவதிலும் ஏற்படுத்திய தாக்கங்களால் இலங்கையர்கள் தொழில்களை இழந்துள்ளனர். வெளிநாடுகளில் தொழில் புரிந்து வந்த இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். அதனால் உள்நாட்டு தொழில் வாய்ப்புகள் குறைவடையக் கூடிய சாத்தியங்களும் அதிகரித்துள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று பரவுகை காரணமாக இலங்கையர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

கடந்த மார்ச் மாதம் முதல் மே மாத இறுதி வரையில் இவ்வாறு 37ஆயிரத்து 500 இலங்கையர்கள் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டுக்கு குறிப்பிட்டளவு தொகையான வருமானத்தை அந்நிய செலாவணி ஈட்டித் தந்துகொண்டிருந்தது. கொரோனா உலகையே கட்டிப்போட்டுள்ளதால், தொழில்கள், தொழில் நிறுவனங்கள் செயலிழந்துள்ளன. அவற்றை நம்பியே இலங்கையர் அதிகளவில் வருமான மீட்டினர். நிறுவனங்கள் முடங்கிமையால் அவர்களும் அவர்களை நம்பியுள்ள இலங்கையர்களும்கூட இதனால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். (த)

# தபால்மூல கல்வியை உடன் ஆரம்பிக்கவும்

### கோருகின்றது கல்விசாரா ஊழியர் சங்கம்

கொழும்பு, ஜூன் 2

இலங்கையில் கொரோனா நெருக்கடி, இன்னும் 100 சதவீதம் சாதாரண நிலைக்கு வராத காரணத்தால், பாடசாலைகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகள் இன்னும் பிற்போடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பாடசாலை மாணவர்களுக்கு தபால் மூலம் இலவசக் கல்வியை கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கல்வித்துறை கல்விசாரா ஊழியர் சங்கம், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்வித்துறை கல்விசாரா ஊழியர் சங்கத்தினரால், கண்டி, அலவத்துகொடையில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில், உரையாற்றுகையில் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஜித் கே. திலகரத்ன, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பாக, இன்னும் இரண்டு வாரங்களில் அறிவிப்பதாக, அரசு அறிவித்துள்ளது. இருந்தபோதிலும், தற்போதைய நிலையில், பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை இல்லை என்று தெரிய வருகின்றது.

வெளிநாடுகளிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள அநேகமானோர் கொவிட் - 19 பாதிப்புக்கு உள்ளான நிலையிலேயே உள்ளனர். வைரஸ் தொற்று முற்றாக நீங்கும்வரை, மாணவர்களுக்கு தபால் மூலம் கல்வியை கற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன் எனத் தெரிவித்தார். (த)

# மீள அரிப்புக்குள்ளாகும் கல்கிசை கடற்கரை

கொழும்பு, ஜூன் 2

கடல் அரிப்பால் சேதமடைந்த கல்கிசை கடற்கரை 890 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டபோதும் மீண்டும் அது அரிப்புக்கு உள்ளாக ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - மாத்தறை ரயில் பாதை கடல் அரிப்புக்கு உள்ளாகும் அச்சுறுத்தலுக்கு தீர்வாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரத்மலானையிலிருந்து களுத்துறை வரையிலான கடற்கரையை சீரமைக்கும் திட்டத்தின் பகுதியாக இந்தத் திட்டம் கடந்த பெப்ரவரி மாதம் நிறைவடைந்தது. எனினும், கல்கிசை கடற்கரை மீண்டும் கடல் அரிப்புக்கு உள்ளாக ஆரம்பித்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் நிரப்பப்பட்ட மணல் அலையில் அரித்து செல்லப்பட்டுள்ளது.

டென்மார்க் நிறுவனம் ஒன்று கல்கிசை கடற்கரையில் மணலை நிறைத்து சீரமைப்புகளை கடந்த பெப்ரவரி மாதம் நிறைவு செய்திருந்தது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)



# தென்மேற்கு பருவமழை அதிகரிக்கிறது

கொழும்பு, ஜூன் 2

தென்மேற்கு பருவமழை படிப்படியாக நாடு முழுவதும் அதிகரித்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மேற்கு, சப்ரகமுவ, மத்திய, வடமேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் பல இடங்களில் மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

மன்னார் மாவட்டத்தில் காலையில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அத்துடன், இடியுடன் கூடிய மழை பெய்யும்போது மின்னல் மற்றும் தற்காலிக பலத்த காற்று காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (த)

# தூக்கில் தொங்கிய நிலையில் சிறுமியின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன் 2

15 வயதுச் சிறுமி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வெல்லாவெளி காக்காச்சிவட்டையைச் சேர்ந்த பாக்கியராஜா மேனகா என்பவரே சடலமாக நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டார்.

அவர் எழுதினார் என்று கூறப்படும் கடிதம் ஒன்றும் அருகில் காணப்பட்டுள்ளது. அதில், தான் வினாத்தாள் செய்யவில்லை என்று தனது பாடசாலை ஆசிரியர் ஏசினார் என்றும் அதனால் தனக்கு வாழ விருப்பமில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். விசாரணை நடைபெறுகின்றது என்று மேலும் தெரிவித்தனர். (த)

# கொழும்பில் வசிப்பவர்கள் பொலிஸில் பதிய வேண்டும்

கொழும்பு, ஜூன் 2

கொழும்பு மாநகரம் மற்றும் புறநகரங்களில் தற்காலிகமாக வசிப்பவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தங்களை பதிவு செய்யவேண்டும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

தேசிய பாதுகாப்பின் ஓர் அங்கமாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸ் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, தொழில் உள்ளிட்ட காரணங்களுக்காக கொழும்பு மாநகரம் மற்றும் புறநகர்களில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பலர் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# வாகன விபத்தில் இராணுவ வீரர் சாவு

வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மொரவெவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

உயிரிழந்தவர் புலிகண்டிகுளம், கோமரங்கடவல பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடையவர் என மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (ஐ)

# மரண அறிவித்தல்

பிறப்பு
21 . 01 . 1954



இறப்பு
01 . 06 . 2020

## பாலகிருஸ்ணன் ஜெயதீஸ்வரன்

உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஸ்ணன் ஜெயதீஸ்வரன் நேற்று (01.06.2020) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன் பரிமளம் தம்பதியரின் அன்பு மகனும், குமாரசாமி பூமணியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பலீலாவின் அன்புக் கணவரும், நர்மதா (யாழ் மாநகர சபை உறுப்பினர்), கீர்த்திகா (யாழ். பல்கலைக்கழக இறுதி வருட மாணவி), அனோஷன் (சனச அபிவிருத்தி வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயகாந்தின் (செயலாளர், முற்போக்கு தமிழ் தேசியக் கட்சி), அன்பு மாமனாரும், Dr.ஜெயராணி, ஜெயராஜன், ஜெயமோகன், ஜெயபவானி, ஜெயசீலன், ஜெயச்சந்திரா, ஜெயரஜினி ஆகியோரின் அன்பு சகோதரனும், Dr.சந்திரப் பிரகாசம், ரதிமனோகரி, மனோன்மணி, செல்வேந்திரன், யோகேஸ்வரி, சந்திரவதனம் (லீலா) மனோகரன், பராசக்தி, ஞானேஸ்வரன், சண்முகேஸ்வரன், இராசேஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 180 7739, 077 362 4334

பொலிஸாரின் வதையால் ஏற்பட்ட

# கறுப்பினத்தவரின் இறப்பால் பற்றியெரிகிறது அமெரிக்கா




வொஷிங்டன், ஜூன் 2
பொலிஸாரின் வதை காரணமாக அமெரிக்காவில் ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவர் உயிரிழந்துள்ள நிலையில், அவரின் இறப்பால் ஒட்டுமொத்த அமெரிக்காவும் கலவர பூமியாக மாறியுள்ளது. நாளுக்குநாள் கறுப்பினத்தவர்களின் இந்தக் கலவரம் வலுப்பெற்று - பலம்பெற்று வருகின்றது.
ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவரின் கழுத்தில் அமெரிக்கப் பொலிஸார் ஒருவர் 8 நிமிடங்களுக்கும் மேலாகத் தனது முழங்காலால் இறுக்க அழுத்திப் பிடித்திருக்கும் ஒளிப்படம் கடந்த வியாழக்கிழமை வெளிவந்தது. அடுத்த சில நிமிடங்களில் அவரின் இறப்புச் செய்தி வெளிவர அமெரிக்காவில் வசிக்கும் கறுப்பினத்தவர்களும் ஒட்டுமொத்த உலக மக்களும் பெரும் கலக்கமும் கொதிப்பும் அடைந்தனர்.
இதையடுத்து கறுப்பினத்தனவர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிராக அமெரிக்காவில் பரவலாகப் போராட்டங்கள் வெடித்தன. இந்தப் போராட்டங்கள் காரணமாக அமெரிக்காவில் 17 பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டங்களால் பொலிஸாரின் வாகனங்கள் பலவற்றுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

# மரண அறிவித்தல்



தோற்றம்
14.08.1945

மறைவு
01.06.2020

## திருமதி நடராசா சிவக்கொழுந்து
## (தவமணி)

பெரியமாவடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா சிவக்கொழுந்து நேற்று (01.06.2020) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், செல்லப்பா மற்றும் பிள்ளைச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், நடராசாவின் பாசமிகு மனைவியும், விமலராஜா (பிரான்ஸ்), பிறேமாவதி (பிரான்ஸ்), சறோஜினிதேவி, மண்டலேஸ்வரி, சிவதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மபிரியா (பிரான்ஸ்), தட்சணாமூர்த்தி (பிரான்ஸ்), வடிவழகன் (தர்ஷன் மரக்காலை), இரவிச்சந்திரன் (தேவி ஸ்ரோர்ஸ்), விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, துரைசிங்கம் மற்றும் தருமலிங்கம், தியாகராசா ஆகியோரின் சகோதரியும், றபிசன், வர்ஷினி, அனுஷியா, கிசோக், லுசான், பிரஜாகரன், தவதர்ஷன், தவதர்ஷிகா, மதுஷன், தனுஷிகா, ஷோபிதன், அபிஷன், கஜீவன், சுபித்ரா, ரதூசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் றெயான், கவின் ஆகியோரின் அன்பு பூட்டியாரும், காலஞ்சென்றவர்களான சிவ யோகம், மனோன்மணி மற்றும் சரஸ்வதி, சத்தியபாமா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2020) செவ்வாய்க் கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியமாவடி வீதி,
சாவகச்சேரி.

தகவல் : குடும்பத்தினர்.
077 666 9079 (ரவி)
077 361 8519 (சிவம்)

## நல்லூர் பிரதேச சபை
### கேள்வி அறிவித்தல் முடிவடையும் திகதி மாற்ற அறிவித்தல்

சபைநிதி வேலைத்திட்டம் 2020 (கட்டம் I). 22.05.2020ந் திகதி வெள்ளிக்கிழமை உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்ட கேள்வி அறிவித்தலில் பின்வரும் மாற்றம் செய்யப்படு கின்றது என்பதனை அறியத்தருகின்றேன்.

பந்தி 06ல் விண்ணப்பம் விநியோகம் திகதி 22.05.2020- 04.06.2020 பி.ப. 3.00 மணிவரை என்பது 09.06.2020 ந் திகதி பி.ப. 3.00 மணிவரையும்.

பந்தி 07ல் கேள்வி திறக்கும் திகதி 08.06.2020 மு.ப. 10.00 மணி என்பது 10.06.2020 ம் திகதி வரையும் என மாற்றம் செய்யப்படுகின்றது.

**தலைவர்**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**

## கண்ணீர் அஞ்சலி



21.05.2020 அன்று இறைபதம் அடைந்த கடற்றொழில் நீரியல்வள திணைக்கள மாவட்ட அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **சண்முகலிங்கம் ஐயர் ராஜீவ் பாபு** அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் திரு. சின்னச்சாமிக்குருக்கள் சண்முகலிங்கம் ஐயர்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கடற்றொழில் நீரியல்வள திணைக்களம், யாழ்ப்பாணம்.**
**உதவிப்பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும்.**


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
### பகிரங்க ஏல விற்பனை -2020

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஏல விற்பனை எதிர்வரும் 04.06.2020 அன்று நடைபெறுமென 22.05.2020 பத்திரிகை யில் பிரசுரமாகியிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஏல விற்பனை எதிர்வரும் 08.06.2020 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

## மரண அறிவித்தல்

உதிப்பு
26 . 07 . 1936



உதிர்வு
01 . 06 . 2020

### கந்தையா இராசதுரை

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும். வேலாயுதம் வீதி நுணாவில் மத்தி சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராசதுரை நேற்று (01.06.2020 ) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -திரவியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசபுஸ்பம், சின்னராசா மற்றும் கனகமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கராசா , கமலாம்பிகை, ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஜந்தினி (சுவிஸ்), கஜேந்திரன் (சுவிஸ்) ரஜீந்திரன் (சுவிஸ்), சுபாஷினி ஆகியோரின் பெரியப்பாவும் கனகசுந்தரம், இராஜேந்திரன் ஆகியோரின் தாய்மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2020) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேலாயுதம் வீதி,**
**நுணாவில் மத்தி, சாவகச்சேரி.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

**கனகமணி தங்கராசா:- 077 134 9580**


## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி திருவையாறு பிரதேசத்தில் அமைந் துள்ள வீடு, கிணறு, பயன்தரு மரங்களுடன் இரணை மடு நீர்ப்பாசன வாய்க்கால் உரிமம் கொண்ட வாகனப் போக்குவரத்து பாதை வசதியுடைய பயிர்ச்செய்கை மற்றும் பண்ணை வளர்ப்பிற்குகந்த 1 1/4 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி உடன் விற்பனைக்குண்டு. வாங்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**077 3530 310**

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு:- 077 6544 574**

## வீடு வாடகைக்குத் தேவை

கச்சேரி, சுண்டுக்குளி பகுதிகளில் சிறிய வீடு வாடகைக்குத் தேவை.

**தகவல்:077 22 68641, 077 242 3880**

## பெயர்மாற்றம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த அவிசாயினி றாயராஜன் ஆகிய நான் இன்றிலிருந்து அபிஷாயினி றாயராஜன் என பெயர்மாற்றம் செய்கின்றேன்.

**றா. அபிஷாயினி**

## விற்பனைக்கு உண்டு

மானிப்பாய் சண்டிலிப்பாய் றோட்டில் 200 மீற்றரில் தபால்கந்தோருக்கு அண்மையில் 10 அடி பாதையில் 7 1/4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தொடர்பு வேண்டாம்) **தகவல்: 0772 539466**

## தங்கநகை மீட்பு

அடைவு வைத்து மீட்க முடியாமல் அறுதி யாகவுள்ள தங்க நகைகளை மீட்டு நல்ல விலைக்கு விற்று மேலதிக பணத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள நாங்கள் உதவுகிறோம்.

உங்களது பெயர், தொடர் இலக்கத்தை **077 8661 605** தொலைபேசிக்கு அனுப்பி வையுங்கள்

## கார் விற்பனைக்கு

CAF - XXXX தொடர் இலக்கம் கொண்ட நல்ல நிலையில் தனிநபர் பாவனையில் உள்ள Toyato - Axcio கார் விற்பனைக்கு உண்டு

**தொடர்புகட்கு:- 077 3039 754**


## மரண அறிவித்தல்



### ஸ்ரீமதி றமணி இளமுருகையன்

**(இசைக் கலைமணி சங்கீத வித்துவான் (வீணை)**

யாழ்ப்பாணம் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிட மாகவும் கொண்ட இசைக் கலைமணி சங்கீத வித்துவான் (வீணை) ஸ்ரீமதி றமணி இளமுருகையன் கடந்த (22.05.2020) வெள்ளிக் கிழமை கனடாவில் காலமானார்.


அன்னார் பல இசைக் கலை மாணவர்களையும், யாழ் பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவில் பல இசை மாணவர்களையும் உரு வாக்கியவர். முப்பது வருடகாலம் இசைத் துறையில் பணியாற்றிய இவர், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், கனடிய கலாபம் தொலைக்காட்சி, கனடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (22.05.2020) வெள்ளிக் கிழமை கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மனைப் பிரார்த்திக்கிறோம்.

**தகவல் :**
**சுப்பிரமணியம் இளமுருகையன்**
**(கணவர் - கனடா)**
**0014164640937**

## 90ஆம் நாள் நினைவலை



### அமரர் செல்லையா சிவதாசன்
**(சன்லைட் டிறைகிளினர்ஸ் முகாமையாளர்)**

தாய் ஈன்றெடுத்த கனமே என்
சகோதரன் என் தலைப்பிள்ளை
என்று பெருமிதம் கொண்ட அந்த
மனம்;
தனியாய் வழி தவறிய
சின்னஞ்சிறு குழந்தையாய்
தாசன் என்றழைக்காத
நாளில்லை என்று தடுமாறி
நிக்குதோ...

ஆயிரம் உறவுதான் ஆராய்ந்து
பார்த்தால் இருக்கும்
உலகத்தில்.
ஆனால்...
ஆராயாமல் அயராமல்
அமராமல் அன்றாடம் ஓடிய
சித்தப்பா என சொல்லி பிள்ளை
வளர்த்த மற்றொரு சகோதரம்
தவிக்குதோ...

கடை கண்டில்லை
கடைக்ண்ணில் கண்ணீர்
வடித்தில்லை
கண்கண்ட தெய்வம் கணவன்
என்றேன்
கண் பார்வை குன்றிண்டேன்
கண்ணாடி தான் வாங்கித் தாரேன்
என்றவரோ - என் கண்ணாடி விம்பத்தினுள்
தெரியாமல் போனாரோ என்று விழி மழுங்கி
கண்ணீர் மல்கி மனைவி தேடுகிறதோ...

அப்பா! தெய்வம்! கரு
ஒன்றெண்டு கருவாகி பிறந்த
நாள் தொட்டு போற்றியவர்களே,
கால் தடம் பூமியில் பதிக்க
வைத்தாய்.
உலகில் நாம் நம் தடம் பதிக்க
முன் சென்றாயோ-அப்பா!
அப்பா! அப்பா! என்றழைத்து
குரலடைத்து குழந்தைகள்
தவிக்கிறதோ...

அண்ணன் தம்பி பலவிதம்,
பல்லாயிரம் இவ்வுலகினிலே !
நாம் அன்னை மடி கண்ட நாள்
தொட்டு அன்றாடம் அருவி
தழுவிய பாசப்பிணைப்பு அப்பா
சித்தப்பா!!
சித்தப்பா! சித்தப்பா!
என்று அண்டை நாட்டில்
மாரடைத்து அண்ணன்
பிள்ளைகள் தவிக்கிறதோ...

பல்லாண்டு கடந்தாலும் பல
வரலாறு கண்டாலும்
நம் பாசம் பரிதவிப்பு தவிர்த்து
ஒரு நாள் தாண்டிடாது சாமி!

கல்லில் கண்டில்லை சாமியை;
நம் கண்களினால் உள்ளத்தினால்
கண்ட சாமி!

**91/13, புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**0777 110 251**

## கேள்வி அறிவித்தல்
### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
### சபை நிதி -2020

21.05.2020 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 08.06.2020 ம் திகதி பி.ப 2.00 வரை நீடிக்கப்படுகின்றது.

கீழே அட்டவணையில் குறிப்பிட்டவாறாக கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் மாற்றமடைகின்றது என்பது அறியத்தரப்படுகின்றது.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|
| NP/14/45(3)/PL/03/ C.F/W/05/2020 | இயக்கச்சி உப அலுவலக வீதிகள் | 24.08.2020 |
| NP/14/45(3)/PL/03/ C.F/W/06/2020 | புலோப்பளை உப அலுவலக வீதிகள் | 24.08.2020 |
| NP/14/45(3)/PL/03/ C.F/W/07/2020 | முகமாலை உப அலுவலக வீதிகள் | 07.09.2020 |

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பற்றிக் டிவின்சன்**
**(மில்ற்ரன்)**


இறப்பு
02.06.2009

கண்ணிமைத்து விழிக்கவில்லை
பதினொரு ஆண்டுகள் சென்றுவிட்டதையா
ஒரு நொடிப்பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம் எம்மை விட்டு...

என்றும் நினைவில்
தாய், சகோதரர்கள் மற்றும் மருமக்கள், மச்சான்மார்கள்.

149/2, கதிற்றல் லேன்,
யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்



யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் முன்னாள் தலைவர் (2009-2012)

**அமரர் N.மதிவதனன்**

அவர்களுக்கு எமது இதயம் நிறைந்த கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு. இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து இவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம்

## மரண அறிவித்தல்



**திருமதி இராமநாதன் சரஸ்வதிப்பிள்ளை**

சாவகச்சேரி கல்வயலில் வாழ்ந்தவரும் சாவகச்சேரி வடக்கு மீசாலையில் வசித்து வந்தவருமான திருமதி இராமநாதன் சரஸ்வதிப்பிள்ளை நேற்று (01.06.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சுப்பிரமணியம், சரவணமுத்து, பொன்னுத்துரை, செல்லத்துரை மற்றும் நமசிவாயம், வள்ளியம்மையின் அன்புச் சகோதரியும், ரவீந்திரன் ரமணி, சுகுணாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் சித்தியும், சுரோக்கா, சாங்கவி, சரண்யா, அபிசனா, அபினயா, ஆருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சர்வேஸ்வரி, செல்வகுமார் மனோகரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு, மீசாலை,
(இலுவத்திப்பிள்ளையார் கோவில் முன்பாக)

தகவல்:
ந.ரவீந்திரன்
077 713 0160
077 087 1009

## விற்பனைக்கு

மிளகு கன்று, கொழும்பு வெற்றிலை மற்றும் பல இனக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-077 612 9343
நியுலங்கா பாம்
பலாலி றோட் ஊரெழு மேற்கு
கணேசா பாடசாலைக்கு அருகாமை

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## துயர் பகிர்வு

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியைகளான திருமதி தேவமனோகரி உருத்திரசிங்கம், திருமதி தேவலோசனி சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி குமரவேள் இராஜலக்சுமி**

30.05.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

யாழ் கல்விவலய
இசையாசிரியர் கழகம்

## துயர் பகிர்வு

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியை திருமதி சுதமதி ஸ்ரீதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்துரை நல்லதம்பி**

07.04.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

யாழ் கல்விவலய
இசையாசிரியர் கழகம்

## கண்ணீர் புஷ்பங்கள்



பூமியில்
01.03.1956

இறைவனடியில்
30.05.2020

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்திருந்த எமது அம்பாள் ஆலய முன்னாள் அறங்காவலர் சபை உறுப்பினரும், சமய சமூகத் தொண்டரும், சிறந்த ஆலய சேவையாளரும், அன்பும், பண்பும், பக்தியும் நிறைந்த

**ஆறுமுகம் உருத்திரமூர்த்தி**

அவர்களின் திடீர் மறைவு எம்மெல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு. அவரின் ஆத்மா தாங்கு சங்கலைத்தாயின் தாளிணைகளில் தங்கிட பிரார்த்தனை செய்கின்றோம்.

01.06.2020

சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள்
குடும்பத்தினர்கள்
ஆலய பிரதம குரு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள்
ஆலயம் சுதுமலை, மானிப்பாய்

## மரண அறிவித்தல்



தோற்றம்
22.05.1936

மறைவு
30.05.2020

**வைத்திலிங்கம் பொன்னுத்துரை**

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கனடாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பொன்னுத்துரை கடந்த (30.05.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகேஸ்வரி(இலங்கை) மற்றும் திருநாவுக்கரசு (கனடா) ஆகியோரின் சகோதரரும், விஜயறதி (லண்டன்), விஜயசீலன் (கனடா), விஜயபவன் (கனடா), விஜயசந்தர் (கனடா), விஜயகுகன் (கனடா) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (அதிபர், நடேஸ்வரா கல்லூரி, காங்கேசன்துறை), நடராசா (கனடா) காலஞ்சென்ற கார்த்திகேசு (கனடா), கதிரவேலு (கனடா), தனவதி (இந்திரா- இலங்கை) ஆகியோரின் மைத்துனரும், நேசரட்ணம் (லண்டன்), குமுதினி (கனடா), விஜய நந்தினி (கனடா), ரஞ்சிதமலர் (கனடா), சுஜேந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஞ்சி (ஜேர்மனி), சபிதா (லண்டன்) ஆகியோரின் அம்மப்பாவும், ஜனாத், ஜெனீபா, விதுசன், துர்க்கா, தாரணி, ஜெனனி, புவனி, ஓவியா, இலக்கியா, மாசிலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், ரீனாதேவி, அபினயா, அர்வின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2020) புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்
பெறாமகன் (கு.சொரூபன்-கஜன்)
077 711 1022

## மரண அறிவித்தல்



தோற்றம்
30 . 06 . 1935

மறைவு
01 . 06 . 2020

**திருமதி தங்கம்மா சோமசுந்தரம்**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், 83/16 அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சோமசுந்தரம் நேற்று (01.06.2020) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், சிவராசா, நாகராணி, சோதிபாலன் (கனடா), தவயோகராணி, சுந்தரலிங்கம், சோதிராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கோமதி, ஜெயானந்தன் (நிர்வாக உத்தியோகத்தர், யாழ்.மாநகர சபை), சியாமளா (கனடா), முருகதாஸ் (கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்-வேலணை) ஆகியோரின் மாமியாரும், பிரணவி (யாழ்.பல்கலைக்கழகம்), தனலக்ஷன், நவாகினி, நவாசினி, சோஜினி, (பல்கலைக்கழகம்-பிரித்தானியா), கஜானன், யாழினி, எழினி, கஜார்த்தனி, நிந்துயன் ஆகியோரின் அன்பான பாட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.06.2020) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. தற்போதய நாட்டு நிலையால் பல உறவுகளுக்கு இந்த தகவலை தெரியப்படுத்த முடியவில்லை. இதனை மனவருத்தத்துடனும், தாழ்மையுடனும் தெரிவத்துக் கொள்கின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

83/16, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்



### நமசிவாயம் மதிவதனன்

ஆலோசகர்: மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்
முன்னாள் வலய முகாமையாளர் -
Allianz Insurance, Union Assurance PLC

கைதடி நுணாவில், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சிவன் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியில் வசித்து வந்தவருமான நமசிவாயம் மதிவதனன் கடந்த (31.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிங்கபாகு காந்திமதி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், டனுஷ்கர் (ஜேர்மனி), டக்ஷாயினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலாவின் (இந்தியா) அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.06.2020) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கிராஞ்சி லேன்,**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**
**தொ.இ: 0777730597.**

**தகவல்:**
**வி.சுகுமாரன்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**10 . 03 . 1956**



**மறைவு**
**30 . 05 . 2020**

### ஆறுமுகம் உருத்திரமூர்த்தி

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் உருத்திரமூர்த்தி கடந்த (30.05.2020) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் அன்னமுத்து தம்பதி யரின் இளையமகனும், காலஞ்சென்றவர்களான நடேசர் சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் (பவானி-ஆசிரியர் யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், மகேஸ்வரி, பரமேஸ் வரி, விசாகரத்தினம் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, முருக மூர்த்தி, சிவபாதம் வரதராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவ ஞானசுந்தரம் (கனடா), சிவகாம்பிகை, சிவயோகசுந்தரம், கமலாம் பிகை, சிவராஜசுந்தரம் (அபுதாபி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவசுரேஸ், சிவசுரேசினி, சிவநரேந்திரன், முகுந்தன், புவனி ஆகி யோரின் அன்பு மாமனாரும், குமரன், நந்தன், ஸ்ரீபிரணவன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2020) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செல்லத்துரை பாடசாலை முன்பாக**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

**தகவல்: மனைவி.**

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை பற்குணராஜா (குணம்)

**(லிங்கம் ஸ்ரோர்ஸ், பிள்ளையார் அரிசி ஆலை உரிமையாளர், தாவடி)**

ஈஞ்சடி வைரவர் கோவில் சுதுமலை வடக்கு மானிப்பாயை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பற்குணராஜா நேற்று (01.06.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், இரத்தினம்மா (தாவடி) தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன் புக் கணவரும், குகேஷன் (முகாமையாளர், HNB Assurance-கொழும்பு), அனுஜன் (Hybrid Hub-கொழும்பு), விஸ்னுஜன் (Biomedical Engineer, வடக்கு-கிழக்கு) ஆகியோரின் தந்தை யும், சுகன்யா (Finance Director-கொழும்பு), கஜேந்தினி (Sampath Bank-கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கவியன், தாணியா ஆகியோரின் அன்பு பேரனும், விரதசாரணி, (கிளி) - மகாலிங்கம் (காலஞ்சென்ற), செல்வராஜா-மாலினி (கனடா), காலஞ் சென்ற ரவினா-சிறிகாந்தன் (கனடா) புவனராணி-சிவபாதம் (கனடா), சுகுணராணி-காண்டீபன் (வவுனியா) ஆகியோரின் அன்பு சகோதரனும், தர்மகுலசிங்கம், பரமேஸ்வரலிங்கம் சரஞ்சினிதேவி, ஜெகதீஸ்வரி, இராசலிங்கம், சிவதாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2020) செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 787 2640,**
**077 337 5630**

**மதவடி ஒழுங்கை,**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**



# கிளிநொச்சி நகரில் நவீன பொதுமையம்

கிளிநொச்சி,ஜூன் 2

12.2 மில்லியன் செலவில் கிளிநொச்சி நகரில் நவீன பொது வசதிகள் மையம் நேற்றுத் திங்கட்கிழமை திறக்கப்பட்டது. உலக வங்கியின் நிதி உதவியுடன் நீர்வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குறித்த பொது வசதிகள் மையம் நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல், வீடமைப்பு வசதிகள் அமைச்சினால் நிர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி சேவைச்சந்தையின் ஒரு பகுதியில் கனகபுரம் வீதியில் குறித்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பொதுச்சேவையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நவீன முறையில் பொது வசதி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில், கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (க-35)

# 103 வயது மூதாட்டி நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமராட்சியில் 103 வயதுவரை வாழ்ந்து வந்த பெண் நேற்றுக் காலமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

தேவன்குறிச்சி இலக்கணாவத்தை உடுப்பிட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னம்மா என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். 1917.03.பிறந்த இவர், 30.05. 2020. சனிக்கிழமை காலமானார்.

சென்ற வருடம் ஆகக்கூடுதலான வயதில் இருப்பவர் என்ற நிலையில் தெரிவுசெய்யப்பட்டு கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவை பிரிவினர் அந்தப் பெண்ணுக்கு காசோலை வழங்கியிருந்தனர்.

வடமராட்சியில் ஆகக்கூடுதலான வயதில் இதுவரையும் இருந்தவர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

**வீடு வாடகைக்கு உண்டு**

தலையாழி வைரவர் கோயிலுக்கு அண்மையில் சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத் தக்கது.

**071 117 4190**

**வீடு வாடகைக்கு**

வைமன் வீதி, நல்லூரில் 3 அறைகள் கொண்ட கீழ். மேல் மாடி. இரு ஹோல் உள்ள மாடி வீடு வாடகைக்கு உண்டு.
அரசாங்கம். வங்கி ஊழியர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகொள்ள வேண்டிய இல.

**077 638 3072**

**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு அலுமினியம் பிற்றிங் வேலை தெரிந்தவர்கள் தேவை. அனுபவம் மிக்கவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு - 0773165555

# சுற்றுலாத்துறையை ஆரம்பிக்க அரசு கடுமையான முனைப்பு!

**கொழும்பு, ஜூன் 2**

**ஓகஸ்ட் முதலாம் திகதி சிறிய சுற்றுப்பயணக் குழுக்களின் சுற்றுப்பயணத்திற்குத் தயாராகிச் சுற்றுலாப் பருவத்தை முன்னிட்டு சுற்றுலாத் துறையை மீண்டும் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.**

அதன்படி, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் தலைவரான கிமாலி பெர்னாண்டோவுக்கு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சுற்றுப் பயணங்கள் கடுமையான சுகாதார கட்டுப்பாடுகளுடன் இடமளிக்கப்படும்.

சுற்றுலாப்பயணிகள் யாலை தேசிய பூங்கா, உடவலவே, அருகம் விரிகுடா, திருகோணமலை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கடற்கரை பகுதிகளை கடுமையான விதிமுறைகளின் கீழ் பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள். (ம)

# சமஷ்டியூடான அதிகாரப் பகிர்வே தமிழர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு

## ஈ.பி.ஆர்.எல்.எவ் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 2

சிங்கள அரசுகளின் செயற்பாடுகளினாலேயே தமிழ் மக்கள் தனி ஈழக் கோரிக்கையை முன்வைத்தார்கள் என தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமனற உறுப்பினரும், ஈ.பி. ஆர். எல். எவ் கட்சியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் சமஷ்டி தீர்வு ஊடாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் மகிந்தராஜபக்ச தமிழ் தலைவர்கள் தனி நாட்டுக்கோரிக்கை மன நிலையில் இருந்து மாறவேண்டும். அது நடைமுறைச் சாத்தியம் இல்லை என்று கூறியமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துக்களை பகிரும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் தனிநாட்டுக் கோரிக்கை 1976 ஆம் ஆண்டிலேயே வந்தது. இந்த தனி நாட்டுக் கோரிக்கை வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் ஊடாகவே பிரகடனம் செய்யப்பட்டது. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தந்தை செல்வநாயகமும் தமிழர் விடுதலைக் கூட்டணி யுமே கொண்டுவந்தது. மாறாக தமிழீழ விடுதலைப்புலிகளோ அல்லது ஆரம்பகாலத்தில் இருந்த ஏனைய போராட்ட இயக்கங்களோ கோரவில்லை.

ஜனநாயக ரீதியாகப் போராடிய தமிழ்த் தலைவர்களே தனிநாட்டுக் கோரிக்கையைக் கோரினார்கள். அவர்கள் ஏன் அவ்வாறு கோரினார்கள் என்பதற்குப் பல காரணங்களும் உண்டு. அன்றைய காலத்தில் இருந்த சிங்கள அரசுகள் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக செய்துகொள்ளப்பட்ட பல உடன்படிக்கைகளை கிழித்தெறிந்தார்கள். குறிப்பாக டட்லி சேனநாயக்க உடன்படிக்கை, பண்டார நாயக்க ஒப்பந்தம் என உடன்படிக்கைகளை அப்போது ஆட்சியில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன கிழித்தெறிந்தன.

இலங்கைத் தமிழர்கள் மீது சிங்கள அரசு திட்டமிட்ட வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. அரச நிர்வாகத்தில் தனிச் சிங்கள மொழி மட்டுமே பின்பற்றப்பட்டது, பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஊடாக சிங்களமயமாக்கல் இடம்பெற்றது. அதன் ஊடாக தமிழர்களின் காணிகள் பறிக்கப்பட்டு அதில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள். இதனால் தமிழ் மக்களின் தனித்தன்மை கேள்விக்குறியாகியது. எனவே தமிழர்கள் தமது இறையாண்மையை மீளப்பெறவேண்டும் என்றே தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தனர். தமிழர்கள் இந்த நாட்டில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்க பிரதான காரணம் இலங்கை அரசின் கடும் போக்கே. அதனாலேயே ஈழத்தமிழர்கள் தனி ஈழக்கோரிக்கையை முன்வைத்தார்கள். எனவே மாற வேண்டியது தமிழ் மக்களோ தமிழ் அரசியல்வாதிகளோ அல்ல சிங்கள அரசியல்வாதிகளே. இந்த நாட்டில் வாழும் ஏனைய மக்களைப் போன்று சமமாக வாழும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக மதம், மொழி, கலாசாரம், பழக்க வழக்கங்கள் போன்றவற்றில் தனித்துவம் பேணப்பட வேண்டும். அதற்கு முதலில் இந்த நாட்டில் சமஷ்டி அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும். நாடு பிரியக்கூடாது என்றால் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். தமிழ்த் தலைவர்களின் மனோ நிலை மாற வேண்டும் என்று பிரதமர் மகிந்த புலம்புவதற்கு முன்னர் ஏன் இந்த நிலைமை வந்தது என்று ஆராய வேண்டும். அதனைத் தீர்க்க வழிமுறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இதனை விடுத்து வெறுமனே தமிழ் மக்கள், தமிழ் அரசியல் தலைவர்களின் தனி நாட்டுக் கோரிக்கை மனோநிலை மாற வேண்டும் என புலம்புவதில் அர்த்தம் இல்லை என்றார். (ப-20)

# வேலைவாய்ப்புகளுக்காக சிலர் தென்கொரியாவுக்கு

தென்கொரியாவில் தொழில்களில் ஈடுபட்டு விடுமுறைக்காக தாய்நாட்டுக்கு வந்த இலங்கையர்களில் ஒரு தொகுதியினர் மீண்டும் தென்கொரியாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மத்தள விமான நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

தென்கொரியாவில் தொழிலில் ஈடுபட்டிருந்த இலங்கையர்கள் விடுமுறைக்காக தாய் நாட்டுக்கு வந்திருந்தனர். கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக அவர்கள் உரிய தினத்தில் மீண்டும் தென் கொரியாவுக்கு செல்ல முடியாத நிலை காணப்பட்டது. இந்நிலையில், அவர்களை மீண்டும் தமது தொழில் தளங்களுக்கு அனுப்பிவைக்கும் வேலைத்திட்டத்தின் ஒருபகுதியாகவே நேற்றுமுன்தினம் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் அந்த நாட்டில் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே, தொழில்களில் ஈடுபடுவர். அதற்கான ஏற்பாடுகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் கொரிய நாட்டின் மனித வள அபிவிருத்தி நிறுவனமும் இணைந்துமுன்னெடுத்துள்ளன. இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வோரில் அதிகமானவர்களை எதிர்காலத்தில் மத்தள விமான நிலையம் மூலமாக அனுப்புவதற்கு எதிர்பார்த்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்தே தெரிவித்தார். கொரியாவில் வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டு வரும் பணியாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே பணியகத்தின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.